முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: ௬ | ௨௬–௬–௫௯ | வெள்ளி | ஒலி: 10

"தி. மு. கழகத்திற்கு வாக்களித்தவர்கள் எல்லாம் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள்" என்றார், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ராசாராம் (நாயுடு.)

தலைமை நிலையச் செய்தி:

கிளைக் கழகச் செயலாளர். அமைப்பாளர் ஆகியோருக்கு வேண்டுகோள்

பொதுச் செயலாளர் அவர்கள் அறிக்கைப்படி உறுப்பினர்கள் சேர்ப்பதற்கான பதிவுத் தாள்கள் எல்லா மாவட்டங்களுக்கும் தேவையான அளவு தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கின்றன.

மாவட்டக் கழகங்களின் பொறுப்பில் வட்டக் கிளைச் செயலாளர்கள், அல்லது வட்டப் பொறுப்பாளர்கள்மூலம் எல்லாக் கிளைகளுக்கும் தாள்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

கிளைக் கழகச் செயலாளர்கள் தங்கள் வட்டக் கிளைச் செயலாளர் அல்லது வட்டப்பொறுப்பாளர்களிடம் உடனடியாகத் தாள்கள் பெற்று உறுப்பினர் பதிவு செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

உறுப்பினர் சேர்ப்பதற்கான இறுதி நாளாகப் பொதுச்செயலாளர் அவர்களால் 30—6—59 வரையறுக்கப் பட்டிருப்பதை கிளைக் கழகச் செயலாளர்கள் அனைவரும் நினைவுகூரக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்டக்கழகம், அல்லது மாவட்டக் கழகத்தால் குறிப்பிடப்பட்டுள்ள வட்டக் கிளைச் செயலாளர்கள், அல்லது நியமிக்கப்பட்டுள்ள அந்தந்த வட்டப் பொறுப்பாளர்கள் ஆகியோரிடம் மட்டுமே உறுப்பினர் பதிவு விண்ணப்பத்தாள்களைப் பெறுமாறு கிளைக் கழகச் செயலாளர்கள்—அமைப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுவதுடன், தாள்களைக்கோரி தலைமைக் கழகத்திற்கு எழுத வேண்டாமெனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறார்கள்.

உறுப்பினர் பதிவு செய்யப்பட்ட தாள்களையும் — அவைகளுக்குரிய கட்டணத் தொகையையும் நேரடியாகத் தலைமைக் கழகத்திற்கே அனுப்பி வைக்கவேண்டுமெனக் கிளைக் கழகச் செயலாளர்கள், அமைப்பாளர்கள் அறிவிக்கப்படுகிறார்கள்.

30—6—59-க்குள்ளே உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் துரிதத்தையும் ஆர்வத்தையும் காட்டிப் பணியாற்றுமாறு சம்பந்தப்பட்ட எல்லாத் தோழர்களையும் தலைமைக் கழகம் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

41. தேசீய உணர்ச்சியின் தோற்றம்

அன்புள்ள மாதவி,

தேசிய உணர்ச்சி, சர்வதேசியவுணர்ச்சியை எட்டிப் பிடித்துவிட்ட காலத்தில் நீயும் நானும் வாழ்கிறோம். இந்த தேசியவுணர்ச்சி எந்த நிலையில் சர்வதேசியவுணர்ச்சியாக மாறினால் வெற்றி பெறமுடியும், இப்பொழுது விரும்புகின்ற அளவுக்கு அது ஏன் வெற்றியினை அடையவில்லை என்ற விஷயங்களையெல்லாம், இருபதாம் நூற்றாண்டு பற்றிப் பேசும்பொழுது விரிவாகக் குறிப்பிடுவேன். இந்தக் கடிதத்தில், 15—16—ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் தேசிய இனங்கள் எப்படி உருப்பெற்றன என்பது பற்றியும் அந்த இனங்கள் எப்படித் தங்களுக்கெனத் தனிநாடுகளை ஏற்படுத்திக் கொண்டன என்பதுபற்றியும் எழுதுகிறேன்.

மக்களை ஆரம்ப காலத்தில் மதமும் மொழியும் ஒரினமாக ஒன்றுபடுத்தின. ஒரே மதத்தைத் தழுவியவர்கள் தங்களை ஒரு மக்கட் சமுதாயமாக எண்ணினார்கள். மதத்தில் வேறுபாடுகள் தோன்றவும், மொழிகளில் இலக்கியங்கள் வளர்ந்து செழிக்கவும், மொழியின் அடிப்படையில் மக்கள் ஒற்றுமையுணர்வு பெற்று ஒரு கூட்டமாக —ஒரே இனமாகச் சேர்ந்தனர். இப்படி மதமும் மொழியும் புதிய புதிய மக்களினங்களைத் தோற்றுவித்தன. இந்த மக்களினங்கள் நாடுகளாக — தேசங்களாக — உருப்பெற்றன. இதனால் மக்களிடையே புதிய தேசியவுணர்ச்சியொன்று முகிழ்த்தது. ஐரோப்பாக் கண்டத்தில், புதிய தேசங்கள் பல தோன்றி தேசியவுணர்வுடன் வாழத்தலைப்பட்டன.

ஆளுக்கு ஆள் நின்று சமர் புரிந்த நிலைமாறி, துப்பாக்கி, பீரங்கி, வெடி மருந்து போன்றவை கண்டுபிடிக்கப்படவே, தனி மனிதன் தன்னை மட்டும் நம்பி வாழும் நிலை மறைந்து பலராக ஒன்று சேர்ந்து பாதுகாப்புத் தேடும் நிலைபெற்றான். கூட்டங்களை நிர்வகிக்கத் தலைவர்களும், தலைவர்களைக் கட்டியாள வேந்தர்களும் முளைந்தனர். வேந்தர்களுக்குக் கட்டுப்பட்ட தலைவர்களும், எடுபிடிகளும், மற்ற பொதுமக்களும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தை நாடாக எண்ணி, அந்த நாட்டிடம் பற்றுக் கொண்டு, வேந்தனிடம் விசுவாசமுள்ள குடிமக்களாக வாழ்ந்தனர். நாடும், நாட்டையாளும் மன்னனும் மனித வாழ்க்கையை ஆட்டிப் படைக்கும் பலம் பெற்ற சக்திகளாயினர். நாட்டை உருவகப்படுத்திப் பேசி, வழிபாடு செய்யும் நிலையும் தோன்றியது.

மன்னனும் நாடும் பலம் பெற்று செல்வாக்குப் பெறவே நாடுகளுக்கிடையேயும் மன்னர்களுக்கிடையேயும் பிணக்குகள் தோன்றிப் போர் மூண்டன. போர் அபாயம் தோன்றவே அழிவிலிருந்து தங்களையும் தங்கள் மண்ணையும் பாதுகாக்கும் எண்ணம் பெற்ற மக்கள் தேசிய உணர்வு பெற்று ஒரு நாடாக—தேசமாக — ஐக்யமாயினர். தங்களை ஒரு நாட்டுக்குரியவராகப் பேசி, பெருமைப்பட்டுக் கொண்டனர். தேசியவுணர்ச்சி, மனிதனின் உள்ளத்தில் ஆழமாக வேரூன்றி நிலைத்தது. இந்தவுணர்ச்சியும், அதனால் ஏற்பட்ட விளைவுகளும் மனித வாழ்க்கையில் இதுவரை சரித்திரமே கண்டிராத பிரமிக்கத் தக்க மாற்றங்களை உண்டாக்கின.

இந்தவுணர்ச்சி ஐரோப்பாவில் பெரிய அளவில் வளர்ந்தது. நாடுகள் பல தோன்றின. எல்லைகள் தோன்றின. அத்துடன் பேராசையும் பிணக்குகளும் தோன்றின. மன்னர்களின் ஆசை மக்களைப் போர்களில் தள்ளியது. தாய் நாட்டுப் பற்றுடன் உயிரைத் திரணமாக மதித்த வீரர்கள் வழிபாட்டுத் தெய்வங்களாயினர். சில்லறைக் காரணங்களே பெரும் போருக்கு வழி கோலின. எல்லைத் தகராறு ஸ்காட்லாந்தையும் இங்கிலாந்தையும் அடிக்கடி போரில் ஈடுபடுத்தியது. இங்கிலாந்து நாட்டின் அரசன் பிரஞ்சு சிம்மாசனத்துக்குப் பாத்தியதை கொண்டாடி போரைத் துவக்கினான். மறுப்பு மதத்தைத் தழுவிய ஹாலந்துக்காரர்களை முறியடிக்க கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவனான ஸ்பெயின் நாட்டு மன்னன் போர்ப் பிரகடனம் செய்தான். இவ்வாறு நாடுகளுக்கிடையே பல்வேறு காரணங்களால் போர் மூளவே, நாட்டுணர்ச்சியும் மக்களிடையே உறுதியாக வளர்ந்தது. பிரான்ஸ், ஸ்பெயின், ஸ்விட்சர்லாந்து, இங்கிலாந்து, ரஷ்யா போன்ற நாடுகள் தேசியவுணர்ச்சி மிக்க நாடுகளாக ஐரோப்பிய அரங்கத்தில் நிலை பெற்றன. ஜெர்மனி, இத்தாலி இரண்டும் நாடுகளாக அந்தக் காலத்தில் உருவாகவில்லை. வெகு காலத்துக்குப் பின்னரே அவை தேசியவுணர்வு பெற்றன.

பிரான்ஸ்மீது ஆங்கிலேயர் படையெடுத்ததால் பிரஞ்சு மக்கள் தேசியவுணர்வு பெற்றனர். ஆடு மேய்க்கும் பிரஞ்சு சிறுமியான ஜோன் (**Joan of Arc**) பிரஞ்சுக்காரர்களை ஒன்றுபடுத்தி, ஆங்கிலேயர்களை முறியடித்து ரீம்ஸ் என்ற நகரில் பிரஞ்சு மன்னனுக்கு முடி சூட்டினாள். இது 1430-ல் நடந்தது. 1492-ல் ஸ்பெயின் மன்னனை ஃபெர்டினண்டு (**Ferdinand**), இஸ்லாமியர்களை வென்று ஸ்பெயின் மக்களை தேசியவுணர்வு பெறச் செய்தான். பல நூற்றாண்டுகளாக ஆஸ்திரியர்களிடம் அடிமைப்பட்டுக் கிடந்த ஸ்விட்சர்லாந்து, அடிமைத் தளையறுத்து, சுதந்தர நாடாகத் தன்னை 1499-ல் பிரகடனப்படுத்திக்கொண்டது. ஐரோப்பாவில் தோன்றிய முதல் குடியரசு (**Republic**) ஸ்விட்சர்லாந்துதான்! ஆங்கிலேயர்களோ மற்றெவரையும்விட மிகப் பலமான தேசியவுணர்வுடன் வளர்ந்தனர். கடலாதிக்கப் போட்டியும், மத வேறுபாடும் இங்கிலாந்தையும் ஸ்பெயினையும் தீராப் பகை கொண்டு போரிடச் செய்தன. ஜெங்கிஸ்கான், ஆக்டாய்கான் போன்ற மங்கோலியத் தலைவர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த ரஷ்யாவை 1480-ல் பயங்கர ஐவான் (**Ivan, the Terrible**) என வரலாற்றில் அழைப்படும் மாஸ்கோவின் சீமான் விடுவித்து ரஷ்யச் சக்ரவர்த்தியாக 'ஜார்' என்ற பட்டத்துடன் முடிசூடிக் கொண்டான்.

மதப் பிணக்குகளால் ஜெர்மனியும், செல்வச் சீமான்களால் இத்தாலியும் சிறு சிறுபிரதேசங்களாகப் பிரிந்து நின்று, தேசியவுணர்வு பெறாமல் வாழ்ந்தனர். ஜெர்மனியில் பிஸ்மார்க்கும், இத்தாலியில் கரிபால்டியும் பிற்காலத்தில் தேசிய விழிப்பை உண்டாக்கினர். அவர்களுடைய முயற்சியினையும் தொண்டினையும் பின்னர் விரிவாகக் கூறுவேன். இவர்களுடைய முயற்சி 19-ம் நூற்றாண்டில் நடைபெற்றது.

பதினாறும் நூற்றாண்டு, பலம் பொருந்திய பல மன்னர்களைப் பெற்றிருந்தது. அவர்களுடைய பெயர்களை நீ அறிந்திருப்பது அவசியம். ஃபெர்டினண்டைப் பற்றி முன்னரே உனக்குக் கூறியுள்ளேன். பிரான்சு நாட்டில் முதலாம் ஃபிரான்சிஸ் பலம் பொருந்திய மன்னனாக விளங்கினான். இங்கிலாந்தில் போப்பாண்டவரின் கட்டளையையே காற்றில் பறக்கவிடும் துணிவுமிக்க எட்டாம் ஹென்றி ஆட்சி புரிந்தான். ரஷ்யாவில் பயங்கர ஐவான் ஆட்சிபுரிந்தான். மத்திய கிழக்கிலும் பாக்தாத் நகரிலிருந்து கான்ஸ்டான்டிநோபில் வரை 'மகா சுலைமான்' (**Sulei-man the Magnificent**) என்ற இஸ்லாமிய மன்னன் ஆட்சிபுரிந்தான். ஆஃப்கனிஸ்தானத்தில் ஜெங்கிஸ்கானின் வழித்தோன்றல் பாபரின் ராஜ்யம் இருந்தது. இந்தியாவில் மொகலாயப் பேரரசு நிறுவியவரே பாபர் என்பது நீ அறிந்த விஷயம்.

பாபரின் பேரன் அக்பர் மனிதனின் கதையில் மகோன்னதமான பாத்திரம். அவர் விட்டுச் சென்ற அடிச்சுவடுகள், வரலாற்றுப் பாதையில் அழியாமல் இருந்து எத்தனையோ உண்மைகளை நமக்கு எடுத்துச் சொல்லுகின்றன.

சமயப் பற்றுடன், ஆனால் வெறியில்லாமல், சமரச நோக்கோடு அந்தக் காலத்திலேயே திகழ்ந்த அக்பரைப்பற்றி எனது அடுத்த கடிதத்தில் விரிவாக எழுதுவேன்.

அன்புள்ள,

அகத்தியன்.

வெள்ளி 26—6—59 சென்னை

மரண வாசல்!

1947 ஆகஸ்ட் 15-ந் தேதி நள்ளிரவிற்குப் பிறகு இந்த நாட்டு மக்கள் ஏற்றிருக்கும் துன்ப வடுக்களையும் துயரக் காயங்களையும் போல் எந்த நாட்டு மக்களும் ஏற்றதில்லை.

அரசுக் கட்டில் தம் பரம்பரைச் சொத்து என்ற பழுதுபட்ட எண்ணத்தால், நாட்டு மக்களை நாட்டு மக்கள் எனக் கருதாது, வீட்டில் வளர்க்கும் மிருங்களாகக் கருதிக் கொண்டு தங்களின் 'காட்டுத் தனமான' ஆசைகளை — சுயநல எண்ணங்களைப் பூர்த்தி செய்வதில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்கள்.

நாட்டில் வாழும் மனிதரினம் வறுமையின் கோரக் கரங்களிலே அகப்பட்டுக்கொண்டு துடிதுடித்து நாக்குத் தொங்கி இரத்தம் கக்கிச் செத்தாலும் கவலையில்லை அவர்களுக்கு! கூட்டம் கூட்டமாய் பட்டினி கிடந்து குடல்வெந்து குமபி கருகி இறந்தாலும் அவர்களுக்குக் கவலையில்லை! சோற்றுக்கும் வழியின்றி, சுதந்திர உணர்வுக்கும் வகையின்றி செல்லரித்த பண்டங்களாய், ஜீவனற்ற பிண்டங்களாய் வாழும் நிலை பற்றிக் கிஞ்சித்தும் அக்கறையில்லை!

அவர்களின் அக்கறை யெல்லாம் சர்க்கரை என இனிக்கும் பதவி பற்றி!

பதவிப் பழத்தைப் பறித்துக் கொடுக்கும் தேர்தல் எனும் தோட்டக்காரனைப் பற்றி!

— இந்த இரண்டு படிக்கற்களை வைத்துக் கொண்டு ஆள வந்தார் எந்தக் காரியத்தையும் எடை போடுகிறார்கள். வேறெந்த நீதியும் அவர்களின் கண்முன் நிற்பதில்லை. நியாயம், நேர்மை இவைகளை வெறும் சொற்களின் கோவையாகவே கருதுகிறார்கள்.

அவைகளின் பின்னாலே இருக்கின்ற பலத்தைத் துச்சமென மதிக்கிறார்கள்; எதேச்சாதிகாரத்தின் எல்லைக்கோட்டை மிதிக்கிறார்கள்!

எனவே, எந்த மாபாதகச் செயலையும் துணிந்து செய்யும் கல்நெஞ்சத்தைப் பெற்றிருக்கிறார்கள்; நாசகாலர்களுக்குரிய அத்தனை 'அகோர லட்சணங்களையும்' பெற்று விளங்குகிறார்கள்.

வரியா?—சரியோ தவறோ போட்டுக் கொண்டே இரு!

கட்டணங்களா?—கண்கலங்கும் ஏழை மக்களைப் பார்க்காது கண்ணை மூடிக்கொண்டு உயர்த்து!

—இப்படி நடைபெறும் இவர்களின் 'காட்டுத் தர்பாரின்' உச்ச கட்டம்தான் 'சென்னை நகர பஸ்களின் கட்டணத்தை உயர்த்துவது' என்ற திடீர் அறிவிப்பு!

பஸ் கட்டணம் உயர்வதால் பாதிக்கப்படுவோர் யார்?—இந்தக் கேள்வி எழுகிறது நம்முன்!

ஏழைகள்; நடுத்தர வர்க்கத்தினர்!

இந்த இரண்டு பிரிவினர்தான் அதிகமாக பஸ்களில் செல்வோர்; கட்டண உயர்வாலும் அதிகமாக பாதிக்கப்படுபவர்கள்!

கடை வேலைக்குச் செல்வோர்—கணக்கு எழுதச் செல்வோர்—ஆலையின் சங்கைக் கேட்டு அலறியடித்துக்கொண்டு போவோர் — அலுவலகத்தில் பணி புரியச் செல்வோர் — இவர்களைத்தான் சென்னை நகரத்து வீதிகளிலே பஸ்கள் சுமந்து செல்கின்றன!

இப்படிப்பட்ட ஏழ்மை நிலைமையுள்ளவர்களிடமிருந்துதான் அதிகமான கட்டணத்தை வசூலிப்பதென்றும் சென்னை அரசு முடிவு செய்திருக்கிறது.

7, 10, 13, 16, 19 காசு என்றிருக்கும் பஸ் கட்டணங்கள் உயர்த்தப்பட்டு, **10. 15, 20** என்ற முறையில் வசூலிக்கப்படவிருக்கின்றனவாம்.

ஆம்; **7** காசு செலுத்தி தன் அலுவலகத்திற்குச் சென்ற ஏழை, இனி **10** காசு தந்து செல்லவேண்டும்; **10** காசு தந்து சென்றவன் **15** காசு தரவேண்டும்.

—இது வேறெங்கும் நடைபெறவில்லை; ஏழைகளின் நன்மைக்கு நடைபெறும் 'சேம நல' அரசில்தான் நடைபெறுகிறது; நேருவின் சாம்ராஜ்பத்தில்தான் — காமராசரின் ஆட்சியில்தான் நடைபெறுகிறது.

வரவுக்கதிகமான செலவால் வறுமைக் குளத்தில் தத்தளிக்கும் ஏழைகளின் தலையில் கட்டண உயர்வு எனும் பாறாங்கல்லைத் தூக்கிப் போடத்தான் முயற்சித்துக் கொண்டிருக்கிறது, மாநில அரசு!

இப்படி அதிகப்படுத்தப்படும் கட்டணம், எதற்குப் பயன்படப் போகிறது என்பதுபற்றி ஏதாவது கூறினார்களா?

போக்குவரத்து வசதி காவிரிப் பெருக்கைப்போல் பெருகும்!

புதுப் புது பஸ் வழிகள் தோன்றும்!

நின்று நின்று கால் முறியும் கொடுமை மறையும்!

நிதி வசதி பெருகினால், பஸ்களில் வசதி பெருகும்!

—இத்தகைய ஆறுதல் மொழிகளை—மகிழ்ச்சி மொழிகளைக் கூறவில்லை. மாறாக, ஏனிந்த அநியாயக் கட்டண உயர்வு? மக்களின் நன்மைக்காக நடத்தப்படும் அரசினர் 'பணி'யில் ஏனிந்த அநீதிப் பள்ளம்? — என்ற கேள்விகளுக்கு அவர்கள் அளிக்கும் விடை இதுதான்:

"டில்லி சர்க்கார் டீசல், டயர் போன்றவைகளுக்கு அதிக வரி விதித்து விட்டனர். ஆகவே, உயர்த்துகிறோம் கட்டணத்தை! மேலும், அதிக இலாபமில்லை, இந்த பஸ் தொழிலால்!"

டில்லி சர்க்கார் அதிக வரி விதிக்கிறது என்ற ஒரு காரணத்திற்காக ஏழையின் தலையில் அந்த சுமையை ஏற்றுவது எந்த நாட்டு 'சேமநலம்' போதிக்கும் பாடம்? பனையில் தேள் கொட்ட, தென்னையில் நெறி ஏறுவதேன்?

டில்லிக்காரன் டீசல் டயருக்கு வரிபோட்டால், அப்படித் தாங்கள் வரி போடமுடியாது என்பதனால்தானே மறைமுக வரியாக பஸ்களுக்குக் கட்டணத்தை உயர்த்துகிறார்கள்?

அடுத்து அவர்கள் கூறுகின்ற காரணம், பஸ் தொழிலில் லாபம் இல்லையென்று! இது பொய்யோ மெய்யோ என்பதை நாடறியும். ஆனால் அரசாங்க பஸ்களுக்கு இருக்கும் சலுகையும், வசதியுமற்ற தனியார் பஸ்கள் கொழுத்த லாபம் அடையும்போது, இந்த 'சர்க்கார் பஸ்' மாத்திரம் விதிவிலக்காவது ஏன்? வருமானம் குறைவதன் காரணம் என்ன?

ஊழல்,

தேவைக்கேற்றபடி அதிக வாகனங்களை விடாமை,

நிர்வாகத் திறனில்லாமை,

—காங்கிரஸ் ஆட்சியாளருக்கே உரிய இந்த 'நோய்கள்'தான் பஸ்ஸிலும் பரவி பாட்டாளியின் தலையில் கட்டண உயர்வாக வந்து இடியென விழுந்திருக்கிறது.

நோய்களைப் போக்க முயற்சிக்காமல், பாய்மரமற்ற கலங்களாய் வாழ்க்கையில் தத்தளிக்கும் ஏழைகளின் முதுகில் மீண்டும் கட்டண உயர்வை ஏற்றுவது கையாலாகாத தன்மையினால் ஏற்படும் எதேச்சதிகாரத்தைத்தான் வெளிக்காட்டுகிறது.

'டிராம்' வண்டியையும் இழந்து விட்டு, பஸ் ஒன்றையே நம்பி நிற்கும் ஏழை மகனை, தன் 'திறமைக் குறைவால்' மேலும் துன்பத்தில் ஆழ்த்துகிறது இந்த மாநில அரசு! நிர்வாகத்தைச் சீர்படுத்தி, குற்றங் குறைகளைக் களைந்தால் அதிகமான லாபம் கிடைப்பதற்கான வாய்ப்பு நிச்சயம் இருக்கிறது; அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டால் டெல்லி வரியைப் பொருட்படுத்தாது கட்டண உயர்வை நிறுத்தி வைத்து விடலாம்!

செய்வார்களா, கட்டண உயர்விலே ருசிகண்ட 'வரிப்புலிகள்'? செய்யமாட்டார்கள்! செய்வதற்கான மனக் கசிவும், கருணையும் ஏழைகள்பால் அவர்களுக்கில்லை!

'தீமைகளைத் திடீரெனச் செய்து மறைத்துவிடு! நன்மைகளை சிறுகச் சிறுகச் செய்து விளம்பரப்படுத்து!' — என்கிற 'சர்வாதிகார தத்துவத்தின்' கால் சுவடுகளை மிக உன்னிப்பாகப் பின்பற்றி வரும் இந்தக் 'காங்கிரஸ் ஆட்சி' அரசியல் உலகின் 'மரண வாசலை' நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத்தான் இக்கட்டண உயர்வு காட்டுகிறது.

வரிச்சுமையைச் சுமந்து சுமந்து ஒடிந்து கிடக்கும் ஏழையின் முதுகெலும்புக்கு மேலும் மரண வலியைத் தரும் இக்கட்டண உயர்வு, உயர்ந்து விட்ட இந்த ஆட்சிக் கட்டிடம் கலகலத்துப் போகும் என்பதற்கோர் அறிகுறி!

பார்! பார்! கேரளம் பார்!

மாறன் எம்.ஏ.

இரசாங்கமா? அது நான் தானே!—என்று கொக்கரித்துக் கிடந்த பதினுன்காம் லூயியின் ஆணவம் மக்கள் சக்தியின் முன்னே நிற்க முடியாமல் அவனது தலை கில்லெட்டின் இயந்திரத்திலே கிள்ளியெறியப்பட்டதை வரலாற்றுப் புத்தகத்திலே படிக்கிரும்!

போக போக்கியத்திலே தன்னை மறந்து வாழ்ந்த ஜார் ஆட்சி மக்கள் சக்தியால் ஆழக்குழி தோண்டிப் புதைக்கப்பட்ட சுவைமிகு செய்தியை அதே சரித்திரப் புத்தகம்தான் கூறுகிறது.

அந்த வரலாற்றுச் சுவட்டின் எந்தப் பக்கத்தைத் தேடினுலும் பிரபுக்கள் ஆட்சியை—முடியாட்சியை—ஆணவ ஆட்சியை எதிர்த்து மக்களாட்சி வென்றதற்குத்தான் சான்றுகள் கிடைக்கின்றனவே தவிர; மக்களாட்சியை எதிர்த்து யாரும் நிலையான வெற்றி பெற்றதாக உதாரணமே கிடையாது.

ஆனுல் இன்றே தென்கடலின் ஓரத்தில்—கேரளத்துப் பகுதியில் அதை நிரூபிப்பதற்காக ஒரு சிறு யுத்தமே நடந்து கொண்டிருக்கக் காண்கிரும்.

காங்கிரஸ்காரர்கள் இதர மாநிலங்களிலே எப்படி அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் பெருவாரியான வாக்குகளைப்பெற்று ஆட்சிக்கு வந்திருக்கிருர்களோ அதுபோலவேதான் அங்கே கம்யூனிஸ்டுகளும் பதவிக்கு வந்திருக்கிருர்கள்!

சீனத்திலும் கொரியாவிலும் நடைபெற்றதைப்போல கேரளத்துக் கம்யூனிஸ்டுகள் தங்கள் கொடியிலே உள்ள அரிவாளையும் சுத்தியலையும் எடுத்துக் கொண்டு வழக்கமாக அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கும் வேட்டு முறையினுல் அதிகாரத்தைக் கவர்ந்தார்கள் இல்லை.

'காளைமாடு' எப்படி சாதுவாக இதர மாநிலங்களில் சட்ட மன்றம் நுழைந்திருக்கிறதோ அதைப் போலவேதான் கேரளத்தில் கதிர் அரிவாள் அரியணையேறி அமர்ந்திருக்கிறது.

ஆனுல் இதர மாநிலங்களில் காங்கிரசின் ஆட்சியை எதிர்த்து இதர எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தாத இந்த நேரத்தில், கேரளத்திலே மட்டும் காங்கிரஸ் தனது சொந்த பலத்திலே நம்பிக்கையின்றி; நட்பிற்கு அருகதையற்றேர்களிடத்திலெல்லாம் நட்புகொண்டு ஒரு நாச காரியத்திலே நாட்டம் கொண்டிருப்பது ஏன்?

—இன்று இந்தக் கேள்வி இந்திய உப கண்டத்திலே வாழும் ஒவ்வொரு பிரஜையின் உள்ளத்திலும் எழுந்திடக் காண்கிரும்,

புராணங்களிலே படித்திருக்கிரும், அசுரர்களின் அக்ரமங்களை எதிர்த்து தேவர்கள் போராட்டம் நடத்தியதாக!

தங்களைத் தேவர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிற காங்கிரசார் கம்யூனிஸ்ட்டுகளை அசுரர்கள் எனக் கருதி இந்தப் 'புண்ணிய யுத்தத்தை'த் துவங்கியிருக்கிருர்கள்!

—இந்தப் 'புண்ணிய யுத்தம்' நடத்துவதற்காகக் காங்கிரஸ் யார் யாருடன் கூட்டுச் சேர்ந்திருக்கிறது? அவர்களை இணைத்து வைத்திருக்கும் மறைமுக சக்தி என்ன? இதையெல்லாம் கம்யூனிஸ்ட் கட்சி எப்படி சமாளிக்கிறது?—இவைகளைத் தெரிந்து கொள்வதற்கு ..குப்பு வாதக் குட்டையிலே ஊறிக் கொண்டிருக்கும் கேரளத்து அரசியல் களத்திற்குள்ளே நாம் நுழைய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

பல் பிடுங்கப்பட்ட பாம்பாக விளங்கும் காங்கிரஸ் யார் கையில் இருக்கிறது? கத்தோலிக்கர்கள் கையில! சென்ற பொதுத் தேர்தல் நேரத்தில் கத்தோலிக்கப் பாதிரிமார்கள் மதத்திற்கும் அரசியலுக்கும் தொடர்பறுந்து ஆண்டுகள் பல உருண்டோடி விட்டன — என்பதையும் மறந்து காங்கிரசுக்காக நேரடியாக மக்களிடம் சென்று ஓட்டுச் சேகரிக்கும் பணியிலே ஈடுபட்டிருந்தார்கள்.

— இதுபோன்ற காரணங்களால் கேரளத்துக் காங்கிரஸ் முழுக்க முழுக்கக் கத்தோலிக்கரின் கட்சி என்றே கருதப்படுகிறது!

அடுத்து இருக்கும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியிலே ஜாதி இந்துக்கள்தான் அதிகமாக அங்கம் வகிக்கிருர்கள். அதிலும் முக்கியமாக நாயர், மேனன், பிள்ளை போன்றேர்! இந்த மூன்று பிரிவினருக்கும் வெவ்வேறு பிராந்தியங்களுக்கு இந்தப் பெயரே தவிர ஏறக்குறைய இவர்கள் ஒரே ஜாதியினர்தான்! இதனுல் பி. சோ. கட்சி கேரளத்தைப் பொறுத்த வரையில் 'நாயர் கட்சி' என்றே வழங்கப்படுகிறது!

இன்று காங்கிரஸ் தோளோடு தோள் உராயும் இன்னெரு கட்சி முஸ்லீம் லீக்!

சென்ற முறை பண்டிதர் கேரளப் பகுதி சென்றிருந்த போது ஆச்சரியப்பட்டார்—கம்யூனிஸ்ட் ஆட்சி செல்வாக்கு பெற்றிருக்கிறதே—என்பதற்காக அல்ல; அங்கு முஸ்லீம் லீக் சாகாமல் உயிரோடு இருக்கிறதே —என்பதற்காக! ஆச்சரியப்பட்ட நேரு ஆத்திரப்படாமலும் இல்லை. "பாகிஸ்தான் பிரிந்து விட்ட பிறகு இங்கு முஸ்லிம் லீக் இருப்பதற்கு அவசியமே இல்லை" — என்றும் கூறிவிட்டுப் போனுர்.

அன்று யாரைத் தீண்டத் தகாதவர்கள் என்று பிரகடனப் படுத்தினுரோ இன்று அதே முஸ்லீம் லீகினரோடுதான் காங்கிரஸ் கள்ள உறவுகொண்டு கம்யூனிஸ்ட் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குச் சிறிதும் வெட்கமின்றிக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது.

—இதே நேரம் கம்யூனிஸ்ட்டுகளின் நிலை என்ன? அந்தக் கட்சியிலே கீழ் ஜாதி இந்துக்கள் தான் பெரும்பாலோர் அங்கம் வகிப்பதாகக் கூறப்படுகிறது.

அது தவிர கம்யூனிஸ்ட் முதல் அமைச்சர் சார்ந்திருக்கிற நம்பூதிரிப் பார்ப்பனர்களும் அந்தக் கட்சிக்கு ஆதரவு தருகிருர்களாம். நம்பூதிரிகள் பூசாரி இனமாகவும் நிலப் பிரபுக்களாகவும் திகழ்கிருர்கள். ஆகவே கம்யூனிஸ்ட் கட்சி கீழ்ஜாதி இந்துக்களின் கட்சியாகவும் நம்பூதிரிகளின் கட்சியாகவும் அங்கே திகழ்கிறதாம்!

ஆக, இந்தப் பின்னணியில் பார்க்கப் போனுல் காங்கிரஸ் கிறிஸ்தவர்கள் இயக்கமாகவும், கம்யூனிஸ்ட் கட்சி இந்துக்களின் இயக்கமாகவும் விளங்குகிறது.

அதனுல்தான் கம்யூனிஸ்ட் முதல்வர் ஈ. எம். சங்கரன் நம்பூதிரியாரை இரண்டாவது சங்கராச்சாரியார் என்றும் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிருராம்!

அதோடு ஜாதி வெறிபிடித்த ஜனசங்கம் யாரை ஆதரிக்கிறது தெரியுமா?

காங்கிரசையா; நாயர் கட்சியையா? அல்ல; அல்ல; கம்யூனிஸ்ட் கட்சியை!

—இதிலிருந்தே அது இந்துக்களின்கட்சி என்று சொல்வதிலே என்ன தடை இருக்கிறது?

[தொடர்ச்சி பக்கம்—9]



'பெட்ரோல்' பிடிக்கும் வாகனங்கள்!

நீதியைத் துரத்துகிறார்கள்-நாட்டிலே ★ பீதியைப் பரப்புகிறார்கள்! ★

விசித்திரமான வழக்கு ஒன்று வந்தது, அந்த நீதிபதியிடம்!

கைகால்களில் எல்லாம் கட்டுகளுடன் நொண்டி நொண்டி நடந்து வந்தான், ஒருவன். அவனது கையில் ஒரு மூட்டையும் இருந்தது. அவன் நடந்து வந்து கொண்டிருந்தபொழுது அந்த மூட்டை அங்கும் இங்கும் அசைய, 'கல கல' வென்று சப்தம் எழும்பிக் கொண்டிருந்தது. அதில் இருப்பவை அனைத்தும் பொற்காசுகளாகத்தான் இருக்கும் என்று அந்த நீதிபதி முடிவு செய்து கொண்டார். ஆகவே கொஞ்சம் நேராக நிமிர்ந்து உட்கார்ந்து, "என்னப்பா! உன் வழக்கென்ன? உன்னை யார் அடித்து விட்டார்கள்?" என்று பரிவுடன் விசாரித்தார்.

அந்த மனிதன் தன் வழக்கைச் சொல்ல ஆரம்பித்தான்.

"ஐயா! கேளுங்கள் இந்த அநியாயத்தை! நேற்று இரவு நான் ஒரு பணக்காரச் சீமான் வீட்டில் திருடப் போனேன். திரும்புகிற நேரத்தில் சுவரில் ஏறி, மேலே உள்ள சன்னலைப் பிடித்துக் கீழே இறங்கினேன்; அப்போது, அந்தக் கொடுமையை எப்படிச் சொல்வேன் பிரபு — சன்னல் உறுதியில்லாமல் இருந்ததால், அது 'தடா' லென்று கீழே விழுந்தது. சன்னலுடன் நானும் கீழே விழுந்தேன்! இப்படியாகி விட்டது நிலைமை! நீங்கள்தான் இந்த வழக்கை விசாரித்துத் தீர்ப்பளிக்க வேண்டும்!"

—இதைச் சொல்லி முடித்த அவன், தன் கையிலிருந்த பையை ஒருமுறை குலுக்கிக் கொண்டான்.

அந்தக் 'கல கல' சப்தத்தைக் கேட்ட நீதிபதி, உடனே, "என்ன அக்கிரமம் இது! இந்த நாட்டில் ஒரு மனித ஜீவனின் கால் கைகள் ரணமாவதை நான் பொறுக்க மாட்டேன்! உடனே பிடித்து இழுத்து வா, அந்த வீட்டுக்காரச் சீமானை!" என்று ஆணையிட்டார்.

சிறிது நேரத்தில் விலங்கும் கையுமாக நீதிபதியின் முன்னே நிறுத்தப்பட்டான், அந்தச் சீமான்!

"உன் வீட்டு சன்னலை உறுதியற்றதாக—பலத்தைத் தாங்கமுடியாது விழத் தக்கதாக வைத்திருந்தது மாபெரும் குற்றம்—

கண்டிக்கப்படவில்லை! அந்தோ; காப்பாற்றப்படுகிறார்கள்!

மன்னிக்க முடியாத பாவம்! அதற்கு என்ன தண்டனை தெரியுமா?"—என்று நீதிபதி கோபத்துடன் கத்தியபோது அந்தச் சீமான் இடைமறித்தான்!

"நீதிபதி அவர்களே! சன்னல் பலகீனமாக இருந்தது என் குற்றமல்ல; அதைச் செய்து தந்த தச்சனின் குற்றம்!" என்று அழாக் குறையாகச் சொன்னான்.

மறுபடியும் நீதிபதி உத்தரவிட்டார், அந்தத் தச்சனைப் பிடித்து இழுத்து வரும்படியாக. அவனும் வந்து சேர்ந்தான்; குற்றப் பத்திரிகையைப் படித்தார் நீதிபதி.

ஆனால் அவனோ, "தருமதுரையே! உங்கள் குற்றச்சாட்டு என்னைக் குலைநடுங்க வைக்கிறதே! சன்னலை என்னவோ சரியாகத்தான் செய்தேன். ஆனால் அது கீழே விழுவதற்குக் காரணம், அதை சுவற்றில் வைத்துப் பொருத்திய கிழட்டுக் கொத்தனின் குற்றமாகும். ஆகவே அவனை அழைத்து விசாரியுங்கள்!" என்று அழுதான்.

வழக்கைக் கொண்டுவந்த திருடனின் கையிலிருந்த மூட்டையைக் கவனித்துக்கொண்டே, கொத்தனுக்கு 'அரஸ்ட்வாரண்ட்' பிறப்பித்தார், அந்த விசித்திரமான நீதிபதி!

கிழட்டுக் கொத்தனும் வந்தான் நீதி மன்றத்திற்கு! ஆனால், அந்தோ பரிதாபம்; தட்டுத் தடுமாறி வரும்போதே அவன் கண்கள் கண்ணீரைச் சிந்திக்கொண்டிருந்தன. குற்றச் சாட்டைச் சொல்வதற்குள் கதற ஆரம்பித்து விட்டான்.

"மகாப் பிரபு! என்னையா கட்டடம் கட்டத் தெரியாதவன் என்கிறீர்கள்? இதென்ன அக்ரமம்?

கலப்படம்

இந்த நாட்டு அரண்மனை, அந்தப்புரம், ஆண்டவன் வசிக்கும் கோவில்—எல்லாமே நான் கட்டியவைதானே! ஏன்; எசமான் அமர்ந்திருக்கிற இந்த நீதி மன்றம்கூட என் கைகளால் எழுந்ததுதானே! இந்த எழுபது வருட காலத்தில் இப்படி ஒரு குற்றச் சாட்டை என் காதுகள் தாங்கிக் கொண்டதில்லையே!"

"அப்படியானால் நீ ஏன் அச்சுவற்றில் சரியாக சன்னலைப் பொருத்தவில்லை?"—இது நீதிபதி.

"அது என் குற்றமல்ல நீதிமானே! நான் செங்கற்களை அடுக்கிச் சாந்து பூசிக்கொண்டிருந்தபோது, தெரு வழியே மிக அழகான பெண் ஒருத்தி நடந்து சென்றாள். அந்த ரூபவதியின் பேரழகிலே மயங்கிய நான் தொழிலில் தவறி விட்டேன் என்று கருதுகிறேன்! ஆகவே குற்றவாளி அந்தக் கண்களைக் கவர்ந்த கட்டழகிதான்!"— என்றான் அந்தப் பல்லுப்போன கிழவன்!

நீதிபதியால் பொறுக்க முடியவில்லை. மறுகணம் அந்த அழகான யுவதிக்கு ஆட்கள் பறந்தார்கள். தலையை முக்காடிட்டு மூடியபடி கூண்டிலே ஏறினாள், அவள். அதோடுமட்டுமல்ல; அந்த நேரத்தில் தெருவழியே நடந்து சென்றது உண்மைதான் என்றும் ஒப்புக் கொண்டாள்.

"பார்த்தீர்களா? இவள்தான் குற்றவாளி!" என்று கத்திய நொண்டித் திருடனின் கையிலிருந்த பை ஒரு முறை குலுங்கியது!

அதற்குள்ளே சீமான் வீட்டில் கொள்ளையடித்த பொருட்களும் நகைகளும்தான் இருக்கவேண்டும் எனறு கருதினார் நீதிபதி. ஆகவே, அந்தப் பை தனக்கு உடமையாகுமா என்ற ஆசையுடன், "ஆகவே திருடா! உன் விருப்பப்படியே நான் தீர்ப்பளிக்க விரும்புகிறேன்! என்ன செய்ய வேண்டும், இந்தப் பெண்ணை?" என்றார்.

"என்னுடன் அனுப்பிவிட வேண்டும், குடும்பம் நடத்த!"—'சடக்'கென்று பதில் சொன்னான், அவன்!

"சரி! அப்படியே தீர்ப்பளிக்கிறேன்! ஆனால் ஒன்று! நீ அந்தப் பெண்ணைக் கையைப்பிடித்து அழைத்துச் செல்ல வேண்டுமாதலால், உன் கையிலிருக்கும் மூட்டையை என்னிடம் தந்துவிட வேண்டும்!" என்றார், நீதிபதி!

சரியென்றான் அவன். மூட்டையை அவரிடம் தந்து, அந்தப் பெண்ணைக் கையைப் பிடித்து அழைத்தான். அவள் முகத்திரையை நீக்கினான்!

மறுகணம்... நீதிபதி "ஐயோ" என்று அலறினார். அது வேறு யாருமல்ல; அந்த நீதிபதியின் மனைவிதான்!

அதே சமயம்... அவர் கையிலிருந்த பை கீழே விழுந்தது. உள்ளேயிருந்த பொருட்கள் சிதறி ஓடின! அவை காசுகளல்ல; நகைகளல்ல; எல்லாம் திருடன் கையில் இருக்கக்கூடிய கள்ளச் சாவிக் கொத்துகள்!

நீதிபதி தலை கவிழ்த்தார்; திருடன் அவர் மனைவியுடன் போய்விட்டான்!

—இது ஒரு அராபி தேச நாடோடிக் கதை!

இத்தகைய நீதி காக்கும் புத்திசாலியை நீங்கள் வேறு எங்காவது கண்டிருக்கிறீர்களா? இல்லையென்றால் அறிமுகப்படுத்துகிறோம்; அந்த நீதியை மிஞ்சுகின்ற 'நேர்மைத்தனம்' கொண்டவர், பாரத குல திலகம் நமது பண்டித நேரு!

இவர் நீதி காக்கும் முறை எப்படித் தெரியுமா?

நீதிபதியைக் கண்டிப்பார்! நீதியை உதறித் தள்ளுவார்! திருட்டு மதி படைத்தவருக்கு வக்காலத்து வாங்குவார், அவர்களது கையிலே 'மூட்டை' மட்டும் இருந்தால்! இவை எல்லாமே ஜனநாயகத்தின் அடிப்படையில்தான்!

முந்திரா என்ன கொடுமைக்காரத் திமிங்கிலம் ஆயுள் இன்ஸ்யூரன்ஸ் நிதியில் ஒன்றேகால் கோடியை விழுங்கி ஏப்பமிட்டது! அதை இரையாக்கிய நிர்வாகத்தினரை நாடு கண்டித்தது!

அந்த வழக்கை விசாரித்த நீதிபதி விவியன் போஸ், சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளின் பொறுப்பின்மையை வன்மையாகக் கண்டித்தார்! பதவி மகுடத்தைச் சூட்டியவர்களைக் "கொண்டு வாருங்கள் குற்றக் கூண்டிற்கு." என்று குறிப்பிட்டார்!

பொறுப்பாரா நேரு?

இருட்டு உள்ளத்தினராக இருந்தால் என்ன: இரும்புப் பெட்டியும், உள்ளே துருப்பிடித்த பணமும், இருந்தால் போதுமே! கட்சிக்குப் பணம் கொடுக்கும் 'வள்ளல்களை'க் குறை கூறினால் பொறுக்க முடியுமா அவரால்?

காங்கிரசுக்கு இலட்சம் இலட்சமாகப் பணத்தைக் கொட்டிக்

[தொடர்ச்சி பக்கம்—10]

டி. டி. கே. [மாஜி நிதி மந்திரி]	படேல் [நிதி இலாக்கா செயலாளர்]	காமத் [இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத் தலைவர்]	வைத்தியநாதன் [இன்ஷ்யூரன்ஸ் நிர்வாகத் தலைவர்]	முந்திரா [மோசடியின் மறுபெயர்]

தூங்குவது போல் பாசாங்கு செய்வதால் சில நேரங்களில் மிகுந்த வேதனை ஏற்பட்டுவிடும். யாருக்காக பயந்துகொண்டு தூங்குவதுபோல்நடிக்கிறேமோ அவர்கள் பக்கத்திலே இருக்கிறார்களா; போய்விட்டார்களா என்பது தெரியாது. தூக்க நடிப்பில் இமைக் கதவுகளுக்குள்ளே உருண்டு கொண்டிருக்கும் விழிகள்வேறு காட்டிக் கொடுத்துவிடும். தூங்கும் வேடதாரி எவ்வளவு நேரந்தான் மூச்சை ஒரே மாதிரி இழுத்து இழுத்து விட்டுக்கொண்டிருக்க முடியும்? அப்படி இப்படிப் புரண்டு படுப்பதுபோல் நடித்து, அந்த நேரத்தில் வேண்டுமானால் விழிகளை மெல்லத் திறந்து நடப்பதை அறிந்து கொள்ளலாம்.

அப்படிச் செய்வதற்கும் வழியில்லாமல் போய்விட்டது முத்துநகைக்கு! காரணம்; அவள் படுத்திருந்த பாறையில் புரள்வதற்கே வகையில்லை. அருகாமையிலே எந்தச் சலனமும் இல்லை; அருவி ஓசையையும் அடவி அசைவையுந் தவிர! அங்கு வந்த அந்த அழகுமங்கை இருக்கிறாளா? அல்லது போய்விட்டாளா? முத்துநகைக்கு ஒரே குழப்பம். வந்தமங்கையோ எப்பாடுபட்டேனும் தன் கண்களை மீட்டுக்கொள்ளத் துடித்தாளே தவிர வேறெதுவும் செய்திடவில்லை!

அதனால் அவர்களிருவரையும் பொருத்தவரையில் அமைதி குடிகொண்டிருந்தது. வெளித்தோற்றத்திற்கு! உள்ளமோ வெல்லப்பாகுபோல் உருகி ஓடிக்கொண்டிருந்தது, அந்தப்பெண்ணுக்கு! முத்துநகையினால் அதிக நேரம் நடிப்பதற்கு இயலவில்லை. அதனால் அவளும் ஒரே சோகத்தில் படுத்துக் கிடந்தாள். நாழிகை நீண்டு கொண்டே போனது.

முத்துநகைக்கு இப்போது ஒரு புது யோசனை உதயமாயிற்று. அந்தப் பெண் அருகில்தான் இருக்கிறாளா அல்லது போய்விட்டாளா என்பதை அறிந்துகொள்ள அவள் ஒரு தந்திரத்தைக் கையாண்டாள். தான் தூங்குகின்ற பாறையிலிருந்து புரண்டு கீழே விழுவது போல் பாசாங்கு செய்தால் அவள் ஓடிவந்து பிடிக்கக்கூடும்; அப்படி ஓடிவந்து பிடித்தால் அவள் இருக்கிறாள் என்று அர்த்தம்—என எண்ணிக் கொண்டு முத்துநகை தூக்கக் கலக்கத்தில் "உஸ்" என்று சோம்பல் முறித்துக்கொண்டு பாறையின் விளிம்பில் புரண்டாள். அவள் எதிர்பார்த்தபடியே அந்தப் பெண் ஓடிப்போய் முத்துநகையைக் கீழே விழாமல் பிடித்து விட்டாள்.

அதற்குமேல் முத்துநகையால் தூங்குவதுபோல் பாசாங்கு செய்ய முடியவில்லை. நன்றாக உறங்கியவள் போலக் கண்களைக் கசக்கிக்கொண்டு ஆச்சரியத்தோடு சுற்றுமுற்றும் பார்த்து எழுந்து பாறையில் உட்கார்ந்தாள். எதிரே நிற்பவளைப் பரக்க பரக்க விழித்து வியப்போடு உற்று நோக்கினாள்.

அவளோ, தன் நீலக் குறுநயனங்கள் காலின் பெருவிரல் நகத்தில் பிரதிபலிக்குமாறு குனிந்துகொண்டு நின்றாள்.

6. அருவிக்கரையில் தாமரை

அந்த யுவதியின் அழகைக் கண்டு முத்துநகை வியந்தாள். அலையலையாகச் சுருண்டு கிடந்த அவள் கூந்தலின் எழிலும்—அம்புமுனை யெனத்தக்க விழியும்—கீற்றுமின்னல் போன்ற கீர்த்திமிக்க இடையும்—அருவியே ஒரு பெண்ணுருக்கொண்டு அருகே வந்ததோ என எண்ணத் தோன்றும் விதத்தில் இருந்தது.

குனிந்த தலை நிமிருவாள் எனச் சிறிது நேரம் காத்திருந்தாள் முத்துநகை. அவளோ நிலத்திற்குக் கண்களால் முட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தாள். இவளைக்கொண்டு ஏதாவது புதிய சேதிகள் தெரிந்து கொள்ளக்கூடும் என்ற ஒரு ஆசையும் முத்துநகைக்கு எழுந்தது. நாட்டு எல்லைகளைக்கடந்து வெகு தொலைவிலேயுள்ள காட்டு நடுவிலே இப்படி ஒரு காரிகையைக் கண்டது பற்றிய ஆராய்ச்சிக் குழப்பம் வேறு அவளை ஆட்டிப் படைத்தது.

"இவள் யாராக இருக்கும்? பார்த்தால் நன்றாக வாழ்ந்தவளைப் போலத்தானே தெரிகிறது......இவள் குடும்பம் இப்போது நொடித்து விட்டிருக்குமா? முகத்திலே ஏன் அத்துணை சோகம் கப்பியிருக்கிறது? அந்த சோகத் திரையையும் விலக்கிவிட்டு கூத்து மேடையின் தீப்பந்த ஒளிபோல ஒரு புதிய உணர்ச்சிப் பிரகாசம் அவள் வதனத்தில் படர்ந்திடக் காரணம் என்ன? என்னை அவள் காதலிக்கிறாளா? அய்யய்யோ—என்னை அவள் ஆண் மகன் என்றே நம்பி விட்டாளா? இப்படி ஒரு விபரீதம் இந்த வேடத்தால் ஏற்படும் என்று எனக்குத் தெரியாதே! சரி; இவளைப்பற்றி எப்படி விபரம் அறிந்து கொள்வது?" என்றெல்லாம் முத்துநகையின் நெஞ்சத்தில் அடுக்கடுக்காகக் கேள்விகள் எழுந்தன.

"நீ யாரம்மா ?" என்று கேட்டுவிட வாய் திறந்தாள். அதற்குள் திடீரென ஒரு தடை! குரல், அவளுக்குப் பெண் குரல் என்று புரிந்துவிட்டால் என்ன செய்வது? ஆணைப்போலக் குரலை மாற்றிப் பேச அவள் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. இப்போதுதானே வேடம் போட்டிருக்கிறாள்; போகப் போகத்தானே வேடமும் நடிப்பும் பூரணத்துவம் பெறும்! அதனால் அவள், தன் குரல் மூலம் தானே தன்னைக் காட்டிக் கொடுத்துக் கொள்ள விரும்பவில்லை. ஊமை போல் நடந்து கொள்வது என்ற முடிவுக்கு வந்துவிட்டாள். மெதுவாக அந்தப் பெண்ணின் அருகே சென்று கைஜாடை செய்து "நீ யார் ?" என்று கேட்டாள்.

அதற்கு அவள் பதில் சொல்லவில்லை. புன்னகை புரிந்தவாறு கன்னங்கள் சிவக்க, "வலிக்கிறதே" என்று கழுத்து அழுவதையும் கவனிக்காமல் குனிந்து கொண்டாள்.

முத்துநகை அவளது முகவாய்க்கட்டையைத் தன் கையால் திருப்பி தன் முகத்தை அசைத்தவாறு ஊமைச் சைகையில் மறுபடியும் கேட்டாள் யாரென்று!

அந்தப் பெண் உடம்பெல்லாம் சிலிர்த்துவிட நகர்ந்து சென்று ஒடி நின்று முத்துநகையைப் பார்த்து "ஏன் உங்களுக்குப் பேசத் தெரியாதா ?" என்று வீணைத் தந்தி அதிர்ந்தது போன்ற தொனியில் கேள்வியொன்றைத் தொடுத்தாள்.

கேட்டதும் முத்துநகை, இடையில் செருகியிருந்த ஓலைகளில் ஒன்றையெடுத்து ஏதோ அவசர அவசரமாக எழுதினாள். எழுதியதை அந்தப் பெண்ணிடம் நீட்டினாள். அவள் அந்த ஓலையை வெட்கத்தோடு கரம் நீட்டி வாங்கிப் படித்துப் பார்த்தாள்.

"நான் ஒரு லட்சியத்திற்காக பேசாத நோன்பு கடைப்பிடித்து வருகிறேன்; அந்த லட்சியம் இன்னும் சில காலத்தில் நிறைவேறிவிடும்; அதற்குப் பிறகே நான் ஊமை நிலையிலிருந்து விடுபடுவேன்."

என்று எழுதப்பட்டிருந்தஅந்த வாசகம் அவளுக்குப் பேராச்சரியத்தை உண்டாக்கியது.

"உங்கள் பெயர் என்ன ?" என்று கேட்டாள் அவள்.

உடனே முத்துநகை, தன் கழுத்தில் அணிந்திருந்த மாலையை எடுத்து அதில் கோக்கப்பட்டிருந்த முத்துக்களில் ஒன்றைச் சுட்டிக் காட்டினாள்.

"ஓகோ—முத்துவா உங்கள் பெயர் ?" என்றாள் அவள்.

முத்துநகையும் 'ஆம்' என்பது போல் தலையசைத்து விட்டு, "உன் பெயர் என்ன ?" என்ற கேள்வியை விரல் மூலம் கேட்டாள்.

அதற்கு அந்தப் பெண் உடனே பதில் சொல்லிவிடவில்லை. அவள் கண்கள் கலங்கிவிட்டன. முகம் கருத்துவிட்டது. தலையில் கை வைத்தவாறு திரும்பிக்கொண்டாள். முத்துநகை அவளை விடவில்லை. அருகே

அடுத்த இதழ் முதல் தொடர் கதை மூன்று பக்கங்கள்

சென்று அவளது தோளில் கை வைத்துத் திருப்பினுள். அந்தச் செய்கை அந்தப் பாவைக்கு எப்படிப்பட்ட இன்ப உணர்ச்சியை அளித்தது தெரியுமா?

ஆனலும் அழுதவாறு முத்து நகையை நோக்கி, "உங்கள் லட்சியம் என்ன?" என்று கேட்டாள். சொல்லமுடியாது என்று சைகை மூலம் தெரிவித்தாள் மூத்துநகை.

"உங்கள் லட்சியத்தைத் தெரிவித்தால்தான் என் பெயரைச் சொல்லுவேன்! என்று கண்ணீர் விட்டவாறு அவள் கூறினுள்.

முத்துநகை கீழே குனிந்து பார்த்தாள். சுற்றும் முற்றும் தேடினுள். இறுதியில் அவள் தேடியது கிடைத்தது. ஆமாம் ஒரு கரித்துண்டு! அந்தக் கரித் துண்டைக் காட்டி "இது என்ன?" என்ருள் ஊமை ஜாடையில்!

"கரி" என்ருள் அந்தக் கட்டழகி.

பிறகு முத்துநகை தன் காலைக் காட்டிக் கேட்டாள். அவள் "இது கால்" என்ருள்.

இரண்டையும் சேர்த்துக் காட்டி முத்துநகை, மறுபடியும் கேள்வியை ஜாடை மூலமாக எழுப்பினுள்.

"கரி—கால்!...கரி, கால்!....கரிகால்....ஆமாம்; கரிகால் சோழன்! அவனுக்கு என்ன?" என்று ஆவலுடன் கேட்டாள் அந்தப் பெண்.

முத்துநகையோ, சிரித்துக் கொண்டே வாளை உருவி பழி தீர்ப்பதுபோல உயர்த்திக் காட்டினுள்.

"கரிகால் சோழனைப் பழி வாங்குவதுதான் லட்சியமா?"—சிறிது சப்தம் போட்டே கூறிவிட்டாள் அந்தப் பாவை.

முத்துநகை, 'ஆமாம்' என்பது போல் தலையை ஆவேசமாக ஆட்டிக் கண்களை உருட்டி விழித்துப் பழிவாங்கும் உணர்ச்சிக்கு ஏற்றாற்போல் நடித்தாள். நடித்தவள் சும்மாயிருக்கவில்லை; "இப்போது சொல்; உன் பெயர் என்ன?" என்ற பழைய கேள்விக் கணையை மீண்டும் பூட்டினுள்.

"என் பெயர் தாமரை! என்னிடம் இதற்குமேல் ஒன்றும் கேட்காதீர்கள்!" என்று அந்தப் பெண் சொல்லி முடிப்பதற்குள் விம்மி விம்மி அழுதுவிட்டாள்.

முத்துநகைக்கோ ஒரே பயம் —எங்கே திடீரென்று வாய் தவறிப் பேசிவிடுகிருேமோ என்ற பயந்தான் அது! அதற்காக ஒவ்வொரு நொடிப் பொழுதும் தன்னை எச்சரிக்கையாகக் கவனித்துக் கொண்டாள். தாமரையிடம் ஏதாவது தகவல்கள் கிடைக்கக்கூடும் என்ற அவளது எண்ணம் வலுப்பெற்றது. காரணம்; கரிகால் சோழனைத் தான் பழிவாங்கப் போகிறேன் எனத் தெரிவித்ததும், அவளது முகத்திலே ஒரு ஒளி பளிச்சிட்டு மறைந்ததை முத்துநகை இதயத்தில் குறித்து வைத்துக் கொண்டாள். ஓலையை எடுத்து எழுதினுள். அதைத் தாமரையிடம் காட்டினுள்.

அதில்,

"உன்னைப்பற்றிய முழு விபரங்களையும் என்னிடம் சொல்!

இங்ஙனம் முத்து"

—என்று எழுதியிருந்தது.

தாமரை ஓலையைப் பார்த்துவிட்டு, முத்துநகையின் முகத்தை அண்ணாந்து பார்த்தாள். இருவர் விழிகளும் சிறிதுநேரம் உறவாடின. முத்துநகைக்கு ஒரே வேடிக்கையாக இருந்தது. "எவ்வளவு பைத்தியக்காரப் பெண் இந்தத் தாமரை!" என எண்ணிச் சிரித்துக் கொண்டாள்.

தாமரைக்குத் தன் உள்ளத்தில் தேங்கிக் கிடப்பதையெல்லாம் கொட்டிவிட வேண்டும் என்ற துடிப்பு உதயமாகிவிட்டது. தன்னைத் தாமரை ஆண்மகன் என்று நினைத்துக்கொண்டதால் ஏற்பட்ட புது வெட்கம் போலும் அது! அருவியிலே ஆடிப்பாடிக் களித்துக் கரையேறி ஆடைகளை உடுத்திக் கொண்ட அந்த ஆரணங்குகள் கொஞ்சம் தூரம் நடந்து சென்று, புதர் மறைவுகளில் கட்டப்பட்டிருந்த குதிரைகளில் ஏறிக்கொண்டனர். முத்துநகைக்குக் குழப்பம் அதிகமாயிற்று. அவளும் திரும்பி ஓடி வந்து தன் குதிரைமீது ஏறிக்கொண்டாள்.

மெதுவாக அந்தப் பெண்கள் கூட்டத்தைத் தொடர்ந்து புறப்பட்டாள். தாமரை முதலியவர்களின் குதிரைகள் புறப்பட்ட நேரத்திலே மட்டும் மெதுவாக நடக்கத் துவங்கி பிறகு நாலு கால் பாய்ச்சலில் ஓடின. முத்துநகையும் தன் குதிரையின் குளம்படிச் சப்தம் அவர்களுக்குக் கேட்காத வகையில் பின் தொடர்ந்துகொண்டிருந்தாள்.

அவள் ஈர உதடுகளும் அதற்காகப் பிரியத் தொடங்கிவிட்டன.

அந்தச் சமயத்தில் நாலைந்து பெண்கள் ஏக காலத்தில் "தாமரை! தாமரை!!" என்று அழைக்கும் ஒலிகேட்டு, அவள் திடுக்கிட்டாள். தன் அன்புக்குரிய முத்துவைப் பார்த்து, "நாளை இதே இடத்தில் இதே நேரத்தில் சந்திக்கிறேன்." என்று அவசர அவசரமாகக் கூறிவிட்டு ஓடிவிட்டாள். முத்துநகை சந்தடியின்றி அப்படியே நின்ருள்.

சிறிது நேரம் கழிந்ததும் தாமரை சென்ற வழியே மெதுவாகத் தொடர்ந்து கவனித்தாள். தாமரையும் இன்னும் நான்கைந்து பெண்களும் அருவியின் ஒரு பகுதியிலே ஆடையின்றிக் குதூகலமாகக் குளித்துக் கொண்டிருந்த காட்சியைக் கண்டாள். அவளுக்கே ஒருவித வெட்கம். கண்களை மூடிக் கொண்டாள்

அவர்களைத் தொடர்ந்து சென்ற அவள் பார்வை திடீரென வேறு பக்கம் பாய்ந்தது. என்ன வியப்புக்குரிய காட்சி! அவள் கண்களை அவளால் நம்பமுடியவில்லை. தனக்கு மிகவும் தெரிந்த 'யவனக் கிழவர்' வெகுதொலைவில் ஒரு உயர்ந்த குதிரையில் கம்பீரமாக அமர்ந்து தாமரை முதலியவர்களின் குதிரைகளையும் தன் குதிரையையும் தன்னையும் உற்று நோக்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவளால் முன்னும் போகமுடியவில்லை; பின்னும் போக முடியவில்லை.

கல்விக்கூடத்தில் கருநாகங்கள்!

புகுந்துவிட்டது, பாம்பு, கல்விக்கூடங்களில்! வாலை வட்டமாகச் சுற்றி தலையைத் தூக்கி நிறுத்திவிட்டது! ஆதிக்க பீடத்திலேயே ஏறி ஆட்டம் போட ஆரம்பித்துவிட்டது.

ஆம்; இந்தி எனும் மந்தி மொழியைக் கற்ருல் மடி நிறையப் பணம் தருகிருேம் என அறிவிப்பு விடுகிருர்கள்; பண ஆசை காட்டி இளைஞர் மனதைத் திருப்பிடப் பார்க்கிருர்கள்.

இந்தியைக் கட்டாய பாடமாக எடுத்துப் படிக்கும் மாணவன்,

பி. யூ. சி. எனில் ரூ 50.

பி. ஏ. எனில் ரூ 75.

எம். ஏ. எனில் ரூ 100

ஆம்; 50–க்கும், 75-க்கும், 100-க்கும் மயங்கி விழும் 'சபலபுத்தி'யுள்ள மாணவர்களைக் கொண்டு தங்கள் 'அவல' மொழியை வளர்த்திட எண்ணுகிருர்கள்.

இந்தி எனும் விஷப்பாம்பு புகுந்த இடம் தமிழ் எனும் குழந்தை விளையாடும் பள்ளிகள் மட்டுமல்ல!

ஆங்கிலோ — இந்தியர்களுக்காக நடத்தப்படும் ஆங்கிலம் போதிக்கப்படுகின்ற பள்ளிகளில்கூட இந்த நச்சுக் காற்று வீசுகிறது.

இந்த 'விஷம் பரப்பும் பணி' வேகமாகப் பரப்பப்படுகிறது, பணத்தின் உதவியால்!

பணமூட்டையை ஆட்டிக் காட்டி, மானத்தைத் துறந்து 'பிணமாக நான் உலகில் உலவத் தயார்' எனக் கூறும் மாணவர்களின் தொகையைப் பெருக்கிடத் திட்டமிடுகிறது, இந்தி வெறிகொண்ட ஆட்சி!

அந்தோ பரிதாபம்!

அது அறியாத 'பேருட்கள்' தென்னகத்தில் ஏராளமாயிற்றே!

வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள்கள்—

விண்ணேடும், மண்ணேடும் பிறந்த தமிழைக் காக்கும் மார்புகள்—

செந்தமிழுக்காகத் தங்களைத் துண்டு போட்டுக் கொடுக்கும் தேகங்கள்—

சிவப்பான ரத்தத்தை தம் மொழிப் பயிருக்குப் பாய்ச்சிடும் கைகள்—

சிங்கக் கூட்டம்; சிறுத்தைகளின் மந்தை; புலிப் போத்துகள்; பிளிறிடும் யானைப் பட்டாளம்!-இங்கு ஏராளம்; ஏராளம்!

பணம் எனும் அழகால் மயக்கிட நினைக்கும் இந்திப் பாம்பே! பிணமாக்கித் தோலுரித்துப் பிளந்தெறிவாரெம் பைந்தமிழர்! வந்த பாதைதெரியாமல் மறைந்துவிடு, வாழ்வு உனக்கு மீண்டும் வேண்டுமென்ருல்!

வாயினால் வெண்பட்டு நெய்கிறார்— வெறுங் கையை முழமாக்கி அளக்கிறார்!

கண்ணீர் விடுகிறானா? — 'இது வெறும் நடிப்பு! கவனிப்போம்; பொறுத்திரு' — என்று கனிவு தொனிக்கக் கூறு!

பசி பட்டினி என்று பேசினானா? —அது வெறும் பசப்பு — 'பரிகாரம் தேடுவதுதானே எங்கள் பணி'—என்று மழுப்பிவிடு!

'மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்'—என்று கூறுகிறானா? ஐயோ! அவன் பிரிவினைவாதி! உன்னுடன் சேர்க்காதே! விலக்கிவை! அவன் வெறி தணியுமட்டும், கத்தி ஓயட்டும்!

குறைகளைக் கூறுகிறானா? 'அதிகாரத்தைத் தேர்தல்மூலம் பெற்றுப் பதவிக்கு வாருங்கள்; பின்னர் உங்கள் விருப்பம்போல குறைகளை நீக்கிக் கொள்ளுங்கள்' என்று 'ஜனநாயக உபதேசம்' புரியுங்கள்!

தப்பித் தவறி தேர்தலில் வெற்றி பெற்று, பதவி நாற்காலியில் எதிர்க்கட்சியாக அமர்ந்து விட்டால் என்னென்ன இடையூறுகள் புரியவேண்டுமோ அத்தனையும் புரியுங்கள்!

—இந்தக் 'கீதோபதேசங்கள்' தலைமை பீடத்துப் பரந்தாமர்களால் காங்கிரஸ் அமைச்சர்களுக்கு உபதேசிக்கப்படுபவை!

காங்கிரசார் ஆட்சியிலிருக்கும் வரை முதல் விதிகளை மிக ஒழுங்காகக் கடைப்பிடிக்கிறார்கள்! ஆமைகளாய் — ஊமைகளாய் வாழும் மக்களின் உணர்ச்சிப் பெருக்கை தடுத்து நிறுத்திவிட எண்ணுகிறார்கள், பற்பல ராஜதந்திரங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம்!

'மக்களின் குரலை எதிர்த்து நிற்பதைக் காட்டிலும் உதாசீனப் படுத்துவது நம் மந்திரிப் பதவிக்கு ஆபத்தில்லாதது' என்பதைத் தம் நீண்ட கால அனுபவத்தின் வாயிலாக உணர்ந்திருக்கிறார்கள்.

எனவே, கத்திரிக்காய்க்கும், கருணைக் கிழங்கிற்கும் வரியா-என மக்கள் கண்ணீர் விட்டால்—கோரிக்கைக் குரல் எழுப்பினால்—கூட்டம் போட்டுத் தீர்மானம் போட்டால் — குழு அமைத்து அமைச்சரைப் பேட்டி கண்டால் 'கவனிப்போம்; கவனிப்போம்! கொஞ்சம் பொறுத்திருங்கள்!' என்று கனிவு தொனிக்கும் குரலில் பதில் கிடைக்கிறது!

"வேங்கையென சமுதாயத்தில் விளையாடும் முதலாளிகளின் கோரத் தாண்டவத்தால், வீதியோரத்தில் கிடக்கிறோம் வேலையற்று! வாரம் ஒன்றாயிற்று உணவருந்தி!" — என்று பசிப் பட்டாளம் புறப்பட்டால், "உங்கள் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவதே எங்கள் பணி"— என்று பனியிலும் குளிர்ந்த வார்த்தைகள் பதிலாகக் கிடைக்கின்றன!

இந்தப் பதில்களையும் வார்த்தைகளையும் வைத்துக் கொண்டு பட்டினி கிடப்பவன் சோறாக்கி உண்ண முடியுமா?

வெல்லச் சொற்கள், சூழ்ந்திருக்கும் தொல்லைகளை விரட்டியடிக்க முடியுமா?—சிந்திக்கிறார்கள் மக்கள்! எதிர்க் கட்சிகளை பதவிப் பீடத்தில் அமர்த்துகிறார்கள்!

பதவி பறிபோனதால் உள்ளம் துடிப்பெடுக்கிறது, காங்கிரசாருக்கு! மத்திய அரசு கையிலிருப்பதால், இப்படியும் அப்படியும் போகவிடாமல் பதவியேற்றவர்களை அலைய விடுகிறார்கள்!

இப்படி அலையவிடும் காட்சிக்கு ஒத்திகை, மலைப் பிரதேசமான ஊட்டியில் தற்போது நடந்திருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்துப் பெரு நகரங்களுடைய தலைவர்களின் (மேயர்களின்) மாநாட்டில் அது நடந்தது!

மாநாட்டில் பேசிய டில்லி மந்திரி கர்மார்க்கர் 'சேரிகள் ஒழிய வேண்டும்!' — என்று கண்டிப்பான குரலில் முழங்கினாராம்!

அடுத்துப் பேசிய மாநில அமைச்சர் லூர்தம்மாள், "சேரிகளை ஒழிப்பதே நம்முள்ள முதற் கடமை!"—என்று கூறினாராம்!

சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகிற சேரிகளை ஒழிப்பதில் அமைச்சர்கள் ஆர்வம் காட்டுவது கண்டு மக்கள் வியந்தார்கள்.

மனிதனின் விலங்குத் தன்மையாம் சுயநலம் 'விசுவரூப'மெடுத்ததின் பயனாய் விளைந்த சேரிகளில் மனிதன் விலங்கென வாழும் நிலையை உணர்ந்துதான் அமைச்சர்கள் பேசுகிறார்கள் என்று மக்கள் நினைத்தனர்.

சேறும் சகதியுமே நடைபாதை!

சின்னஞ்சிறு குடிசைகளே வீடுகள்!

மூக்குமுனை தரையில் முட்டினால்தான் குடிசைக்குள் நுழைய முடியும்!

மூக்கைப் பிடித்துக் கொண்டால்தான் வழி நடக்கலாம்!

கல்வியில்லாத—கட்டத் துணியில்லாத—கும்பிக்குக் கூழில்லாதவர்களின் கூடாரங்கள்!

—ஆம்; இவைதான் சேரி! நாறிப்போன சமுதாயத்தின் அழுகிய பாகம்! ஆகவே, இதை நீக்கி சேரிவாழ் மக்களை நல்ல நிலையிலே வாழச் செய்ய வேண்டும்—என்ற எண்ணத்திலே அமைச்சர்கள் பேசுவதாக மக்கள் நினைத்தனர்!

இனி, நமக்கு மார்க்கம் பிறக்கும்; ஆமாம்—மந்திரியே பேசிவிட்டார்; கண்டிப்புடன் பேசிவிட்டார்; நம் 'மந்தை வாழ்வு' மாறும்!

புதுப் புதுத் திட்டங்கள் பிறக்கும்!

புதுப்புது வீடுகள் தோன்றும்!

கார்ப்பரேஷன்களுக்கு அதிக நிதி கிடைக்கும்!

அதை நமக்கு அவர்கள் செலவிடுவார்கள்!

குடிசை மாறும்; கும்பி ஆறும்; களிப்புப் பிறக்கும்!—என்று மனக்கோட்டையை வெகு வேகமாகக் கட்டினார்கள் மக்கள்!

அமைச்சர்களின் பேச்சை நம்பி எழுந்த மனக்கோட்டை, இடி விழுந்த மண்கோட்டையாயிற்று, அமைச்சர்களின் செயலால்—இந்த அரசினரின் செயலால்!

சேரி ஒழிக்க வேண்டும் என்று திட்டமிட்டார்களே தவிர, அமைச்சர்கள் தீப்பொறி கக்கப் பேசினார்களே தவிர, மக்களுக்குத் தேன் என இனிக்கும் இச்செய்தியை அழகாகச் சொன்னார்களே தவிர, திட்டம் நிறைவேறிட நிதி வசதியைப்பற்றி வாய் திறக்கவில்லை, இதுவரை!

'காகிதப் பூ மணக்காது; காங்கிரஸ் சமதர்மம் இனிக்காது' என்று நாம் கூறியபோது கணை எனக் கிளம்பி அனல் விடும் கடுஞ் சொற்களை ஏவிய காங்கிரசார், இப்போது சிந்தித்துப் பார்க்கட்டும்.

உலக விஷயங்கள் புரியாதிருக்கலாம், அவர்களில் சிலருக்கு! உள்ளூர் நிர்வாகத்தில் இப்போது காங்கிரஸ் காகிதப்பூ ஆன கதையை கட்டாயம் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

வருகிற வருமானத்திற்கே அதிகமான செலவுகளை வைத்துக் கொண்டிருக்கிற நகராட்சிகளுக்கு மாநில, மத்திய அரசுகள் வெறும் காகிதத் திட்டத்தை தந்தால் போதாது! 'பிச்சை நிதி' தந்தால் போதாது! சென்னை நகராட்சியிலேயுள்ள 376 சேரிகள் அமைச்சர் தரும் பேச்சு ஒன்றினாலேயே அழிந்து விடாது! அவர்கள் தரும் 'சிறு நிதியிலே' சேரி அழிந்து சுகாதாரம் மிகுந்த வீடுகள் தோன்றிவிடாது!

என்றாலும், சேரிகள் மாறித்தான் ஆக வேண்டும். அணி நாட்டை ஆக்கியவர்கள் சாய்ந்திட ஒரு ஈச்சம் பாய்கூட அற்ற இழி நிலைமை மறைந்துதானாக வேண்டும். கூட கோபுரங்களை ஆக்கித் தந்தோர்—மாட மாளிகைகளை பூமியில் நிறுத்தி அழகு பார்த்தவர்கள், ஒண்ட ஓர் நல்ல வீடின்றி—குடிசையிலும், குச்சியிலும், குப்பை மேடு சூழ்ந்த பகுதிகளிலும் குடியிருக்கும் சோகக் கதை முடிவு பெற்றுத்தான் ஆக வேண்டும்.

ஆனால் இந்தக் கதை வெறும் சொல்லில் முடிந்து போவது அன்று; மற்ற பகுதி யெல்லாம் கோட்டை வெயிலால் தணலாய் உருக, குளிர்ந்த மலைப் பகுதியில் குந்திக்கொண்டு கூறும் அமைச்சரின் வெல்லச் சொற்கள் இதற்குப் பயன் தராது என்றால்; வேறு எது திட்டத்தை அமுலாக்கும் வன்மை படைத்தது?

ஆம்; நிதிக்கு அந்தப் பெருமையுண்டு! பணம்தான் திட்டத்தைச் சரிவர செயலாக்கப் பயன்படும். எனவே சேரிசீர்திருத்தத்திற்கு மிக அதிகமான தொகை தேவை! அதை வரிமூலமோ-நிதிமூலமோ கார்ப்பரேஷனுக்குத் தருதல் அறிவுடமை! அப்படித் தந்தால் மாநில, மத்திய அரசுகளின் 'பெருந்தன்மையை' இந்நாட்டு மக்கள் வாழ்த்துவர்; போற்றிப் புகழ் பாடுவர்!

அதைவிடுத்து, சட்டியையும் காலியாக்கித் தந்துவிட்டு, 'வந்து குந்திவிட்ட சொந்தக்காரர்களுக்குச் சோறு போடு' என்று கூறும் கொடுமைக்கார மாமியாரைப் போலத்தான், மாநில—மத்திய அரசுகள் நடந்து கொண்டுள்ளன, நகராட்சிகளைப் பொறுத்தவரை! இம்மட்டோ; சேரி ஒழிப்பிற்கும் சுகாதாரச் சூழ்நிலையை நகரில் ஏற்படுத்துவதற்கும் 'பிரயாண வரியை' விதிக்க முயன்ற சென்னை நகராட்சியின் பொதுநலம் மிளிரும் செயலை அரசாங்க முதல்வர்கள், கேலி செய்ததை—புரட்சிக் குரலெடுத்துக் கூவியதை நாடறியும்.

இப்படி, நல்ல திட்டங்களுக்குத் தலையாட்டி, பெருங் குரலெடுத்துக் கூவிவிட்டு, அதே நேரத்தில் திட்டங்களை நடத்திக் காட்ட நிதி வசதி தராது 'ஏய்த்து' வருகிற இந்த மாநில அரசும், மத்திய அரசும், அமைச்சர்களும், அவர்களுக்கு ஆதரவாக இருக்கும் ஆளவந்தாரின் கட்சியான காங்கிரசும் மக்களின் குற்றச்சாட்டிற்கு இலக்காகியிருக்கிறார்கள். மக்களுடைய குற்றச்சாட்டிற்கு உள்ளாகியவர்கள், மாபெரும் அரசியல் விபத்துக்குள்ளாகமல் இதுவரை தப்பியதேயில்லை!

தி. மு. க.

தலைமைச் செயற்குழு- பொதுக்குழுக் கூட்டங்கள்

★

தி. மு. கழகத் தலைமைச் செயற்குழு — பொதுக் குழுக் கூட்டங்கள் ஜூலைத் திங்கள் 11, 12 (சனி, ஞாயிறு) ஆகிய நாட்களில் மாயூரத்தில் கூடுகின்றன.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

துறையூரில் நடைபெற்ற திருச்சி மாவட்ட தி. மு. க. மாநாட்டு முகப்பு!

பார்!...பார்..!

[4—ம் பக்கத் தொடர்ச்சி]

அதனால்தான் கேரளத்தில் நடக்கும் இந்தப் போராட்டத்தை ஒரு பக்கம் இந்துக்களுக்கும், இன்னொரு பக்கம் பதவி வெறி கொண்டோர்; கிறிஸ்தவ—முஸ்லிம்கள்—ஆகிய இரு சார்பாருக்கும் இடையே நடக்கும் போராட்டம் என்றுகூட சிலர் வர்ணிக்கிறார்கள்!

எது எப்படி இருந்தாலும்; ஜனநாயக முறையைப் பின்பற்றி பதவிக்கு வந்திருக்கும் ஒரு கட்சியைச் சாய்ப்பதற்கு இப்போது நடப்பது சரியான முறைதானா என்பதுதான் இப்போது ஆராய்ச்சிக்குரிய பிரச்சினை.

கம்யூனிஸ்ட் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு வரிந்து கட்டிக் கொண்டு கூட்டணி அமைத்திருக்கும் காங்கிரஸ் அதை ஒழிப்பதற்காகக் காட்டும் காரணங்கள் என்ன?

** கம்யூனிஸ்ட் ஆட்சியில் கலகங்களும். தங்களுக்குப் பிடிக்காதவர்களைக் கொலை செய்யும் அராஜகங்களும் மலிந்து விட்டனவாம்!

— அப்படியானால் காங்கிரஸ் ஆட்சி செய்யும் இதர மாநிலங்களில் எந்த மாநிலத்தில் மேற்கூறிய அராஜகங்கள் நடைபெறவில்லை?

உதாரணமாக சென்னையை எடுத்துக் கொள்வோமே; ஆசிரியர் வேலாயுதம் திராவிடர் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்கிற ஒரே காரணத்திற்காகப் படுகொலை செய்யப்பட்டு, மரக்கிளையிலே தொங்கவிடப்பட்டாரே, உடையார் பாளையத்தில், அந்த அக்ரமம் கம்யூனிஸ்ட் ஆட்சியிலா நடைபெற்றது?

நெல்லிக்குப்பத்திலே காங்கிரசைத் தோற்கடிக்கப் பாடுபட்டான் என்கிற ஒரே காரணத்திற்காக குடல் சரியக் குத்திச் சாய்க்கப்பட்டானே; இயக்கத் தோழன் மஜீத் அந்த அநியாயம் கம்யூனிஸ்ட் ஆட்சியிலா நடைபெற்றது?

** அடுத்து கம்யூனிஸ்ட் ஆட்சியிலே லஞ்சம் தலைவிரித்தாடுகிறதாம்! அங்கே சட்ட அமைச்சர் கிருஷ்ணய்யர் என்பவர் அதிகமாக இவ்வளவு நிலம்தான் வைத்துக்கொள்ளலாம்—என்று சட்டம் கொண்டு வருவதற்கு முன்பாகவே அதிகப்படியான தனது நிலங்களை மிகவும் தந்திரமாக ஒரு 'டிரஸ்ட்' ஏற்படுத்தி அதன் பெயருக்கு மாற்றி; சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டாராம்!

சரி; இவை உண்மையென்றே வைத்துக் கொள்வோம்! காங்கிரஸ் ஆட்சியில் மட்டும் என்ன வாழ்கிறதாம்?

இங்கே லஞ்சம் வாங்காதவர்கள்; பட்ஜெட் வருவதற்கு முன்பே சம்பந்தப்பட்டவர்கள் தெரிந்துகொண்டு கொள்ளை லாபம் அடிக்காதவர்கள் இருக்கிறார்களா?

அவ்வளவு ஏன்; 'பத்து லட்சத்தைச்' சுருட்டிக்கொண்டு போனவர்கள் எல்லாம் கனம்களாக; அமைச்சர்களாகப் புல்லுருவிபோல் வீற்றிருப்பது எந்த மாநிலத்தில்?

—இதைவிட்டு தாங்கள் ஏதோ யோக்யர்கள் என்று பாவித்து மற்றவர்கள்மீது குற்றம் சாட்டுவதிலே என்ன லாபம் இருக்கிறது?

** கம்யூனிஸ்ட்டுகள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திப் பொது மக்களைச் சுட்டுக் கொல்லுகிறார்கள்!

வெள்ளைக்காரனுக்குப் பிறகு இப்போது கம்யூனிஸ்ட்டுகள் மட்டும்தான் துப்பாக்கிப் பிரயோகம் நடத்துகிறார்களா?

குன்றத்தூரிலே, கல்லக்குடியிலே, தூத்துக்குடியிலே துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியது யார்?

முன்பு ஜாலியன்வாலாபாக்கிலே வெள்ளைக்கார டயர் சகோதரர்கள் 1500 ரவுண்டுகள்தான் சுட்டார்கள்!

ஆனால் பம்பாயிலே மொரார்ஜி தேசாய் டயர் சகோதரர்களை நல்லவர்களாக்கி புது ரிக்கார்டை ஏற்படுத்தவேண்டும் -என்பதற்காகவே 2000 ரவுண்டுகள் அல்லவா சுட்டிருக்கிறார்கள்?

கோட்டானை ஆந்தை பழிப்பதிலே என்ன பொருள் இருக்க முடியும்?

** கம்யூனிஸ்ட்கள் சட்டத்தையும் போலீசையும் தங்களது அரசியல் நோக்கத்தை ஈடேற்றிக் கொள்வதற்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்களாம்!

—இந்தக் குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமானால் காங்கிரஸ் ஆட்சி செய்யும் இதர மாநிலங்களிலே இந்த ஊழல் முறை இல்லை என்று எந்தக் காங்கிரஸ்காரனாவது நெஞ்சின் மீது கைவைத்துச் சொல்ல முடியுமா?

முன்பு முதுகுளத்தூரிலே நடைபெற்ற அக்ரமங்களைக் கேட்டு உண்மைக் காங்கிரஸ் வாதிகள்கூட இரத்தக் கண்ணீர் அல்லவா வடிக்கிறார்கள்?

—இதனால் கேரளத்துக் கம்யூனிஸ்ட் ஆட்சி முழுக்க முழுக்க பரிசுத்தமானது என்று விவாதிக்க வரவில்லை. ஆனால் அது இதர மாநிலங்களில் நடைபெறும் காங்கிரஸ் ஆட்சியைவிட எந்த விதத்திலும் தாழ்ந்துவிடவில்லை!

—அப்படியே கம்யூனிஸ்ட் கட்சி ஊழல் நிறைந்ததாகத்தான் இருக்கட்டுமே! அரசியல் அமைப்புப்படி ஒரு ஆட்சியை மாற்றுவதற்கு என்ன வழி சொல்லப்பட்டிருக்கிறது?

—5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் வருகிறது. உண்மையிலே கம்யூனிஸ்ட் ஆட்சி அக்ரமத்தின் கோரத் தாண்டவமாக இருந்தால் வருகிற பொதுத் தேர்தலிலே பொதுமக்கள் அவர்களை விழ்த்திப் பதில் சொல்லிவிடுவார்கள்!

அதற்காக வேண்டுமானால் காங்கிரஸ்காரர்கள் இப்போதிலிருந்தே கம்யூனிஸ்டுகள் செய்ததாகக் கருதும் அட்டகாசங்களையெல்லாம் மாநிலமெங்கும் சூறாவளி வேகத்தில் சுற்றுப் பயணம் நடத்தி மக்கள் மன்றத்தின் முன்னால் எடுத்துரைக்கட்டும்! அதன் விளைவுகளை அடுத்த தேர்தலிலே பார்க்கட்டும்!

—அதைவிட்டு குள்ளநரி வேலை செய்வதிலே என்ன பொருள் இருக்கமுடியும்?

இன்று கேரளத்திலே தர்ம யுத்தம் நடத்திக் கொண்டிருக்கும் காங்கிரஸ்காரர்கள் இன்னொன்றையும் கவனத்தில் வைக்க வேண்டும்!

—சென்னையிலே நடைபெறும் காங்கிரஸ் ஆட்சி மேற்கூறிய குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருக்கிறதே; அதை மறுபடியும் ஒருமுறை நாடெங்கும் எடுத்துரைத்து சென்னையைப் பொறுத்தவரையும் எல்லா எதிர்க்கட்சிகளும் ஒரு அணியில் திரண்டு; காங்கிரஸ் ஆட்சியை எதிர்த்து

[தொடர்ச்சி பக்கம்—12]

முதல்நாள் ஊர்வலத்தில்—பொதுச்செயலாளர், சி. பி. சிற்றரசு மாறன், அம்பில் தருமலிங்கம் ஆகியோர். [புகைப்படம்: பாரத் ஸ்டுடியோ.]

குஷ்டரோகிக்குக் கல்யாணமாம்-ஏழையர் குடலும் ஈரலுமே பூமாலையாம்!

கலப்படம்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

கொடுத்தான் டால்மியா—அவன் இப்போது சிறையில்!

கட்சி வளர்ச்சிக்கு நன்கொடை என்ற பெயரில் இரண்டரை இலட்சத்தை வாரி வழங்கினன் முந்திரா — இப்போது முழு மோசக்காரன் என்கிறது நாடு!

அந்த அடிச்சுவட்டிலேயே எல்லாப் பண மூட்டைகளையும் இழந்து விட்டால், விழுதற்ற ஆலமரமாகிவிடுமே காங்கிரஸ் என்ற கவலை அவருக்கு!

விவியன் போஸ் மட்டும் முந்திரா ஊழல் பற்றி விசாரிக்கவில்லை. அவருக்கு முன்னல், நீதிபதி சாக்ளா என்பவர் விசாரித்தார். "முந்திரா, ஊழலுக்குக் காரணம் சொந்த விருப்பு—வெறுப்புதான்; இது தவறிப்போய் நேர்ந்துவிட்டதல்ல" — என்ற அவரது அறிக்கையைக் கண்டு நாட்டு மக்கள் ஆத்திரமடைந்தார்கள். அதைவிட பெரும் கோபத்தை நேரு அடைந்திருக்க வேண்டும், சாக்ளாவின்மேல்!

'நம்மவர்களை'க் காட்டிக் கொடுக்கிருர்களே என்ற எண்ணத்துடன் மறுபடியும் விவியன் போஸின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

"முந்திரா விவகாரத்தில் ஏற்பட்ட ஊழலுக்குக் காரணம் அதிகாரிகளல்ல; அவர்கள் எல்லாம் ரொம்ப ரொம்பத் தூய்மையானவர்கள்! அவர்களது இருதயங்களை எல்லாம் உடைத்துப் பார்த்தால் தெரியும்; எல்லாமே வெண்மையானது! ஆகவே ஒன்றேகால் கோடியை அவர்கள் துஷ்பிரயோகம் செயயவில்லை! ஆனலும் அது எப்படியோ நேர்ந்துவிட்டது! மேலும் இதில் எவரையும் கண்டிக்க வேண்டியதில்லை. உடனடியாக முந்திராவுக்கு இன்னும் சில கோடிகளைக் கொல்லை வழியிலே கொடுத்து, அவரிடமிருந்து 'கமிஷனக'க் காங்கிரஸ் கட்சிக்கு சில இலட்சங்களை நன்கொடையாகப் பிடுங்கிக் கொள்ள வேண்டும்! ஏனென்றல் அடுத்த பொதுத் தேர்தல் வருகிறதல்லவா ?"

— இப்படித்தான் விவியன் போஸ் எழுதுவார் என்று நேரு எதிர்பார்த்தார்!

ஆனல், அந்தோ பரிதாபம்! அவர் நீதியைத் தேடினர்; அநீதியைச் சாடினர்! ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் அதிகாரிகளைக் குற்றவாளிகளாக்கினர். சாக்ளாவின் முடிவைப் போலவே!

அதனல்தான் பண்டிதருக்குப் பதட்டம் அதிகமாகி விட்டது! பணம் காய்க்கும் 'கர்ப்பக விருட்சங்'களை வெட்டி வீழ்த்தி விடுங்கள் — என்று ஆணையிட்டால், யார்தான் அதை ஏற்றுக்கொள்ள முடியும்?

"உன் தீர்ப்பை நான் ஏற்றுக் கொள்ள முடியாது!"—என்று மறுப்பதற்குப் பதிலாக—

"ஊழலைக் கண்டிக்க நீ யார்?" என்று கேட்பதற்குப் பதிலாக—

"முந்திரா கோடிக் கணக்கிலே சாப்பிட்டால் உனக்கென்ன; உங்க பாட்டன் வீட்டுப் பணமா ?"—என்று கேட்பதற்குப் பதிலாக—

நீதிக்கு வழிகாட்டிய விவியன் போசின்மீது பாய்ந்த நேரு, இதோ இப்படிக் குறை கூறுகிருர்:

* விவியன்போஸ் அரசாங்க நிர்வாகத்தின்பேரில் குற்றம் சாட்டியிருப்பது தவருகும்!
* நிர்வாகத் திறமையை அவர் பெரிதும் பலவீனப் படுத்தியிருக்கிருர்!

— இப்படியெல்லாம் நேராகவும், "எதற்காக உண்மையைச் சொல்கிறீர்கள்; அதற்குத்தான் சர்க்கார் சம்பளம் தருகிறதா, உங்களுக்கு?" என்று மறைமுகமாகவும் சாடியிருக்கிருர்.

நீதி நிர்வாகத்திலே பண்டிதர் தலையிடுவது கண்டு—வெளிப்படையாகத் தாக்குவது குறித்து நீதிபதிகள் கொதித்தெழுந்திருக்கிருர்கள்.

"நீதித் துறையின்மீது இந்தத் தாக்குதல் அநியாயமாகும்! பொறுப்புள்ள பதவியில்இருப்பவர் இப்படிப் பேசுவது மன்னிக்க முடியாத குற்றமாகும்!"

—சுப்ரீம்கோர்ட் வக்கீல் சங்கத் துணைத் தலைவர் என். சி. சட்டர்ஜி இப்படி ஒரு அறிக்கையிலே கண்டித்திருக்கிருர்.

யார் கண்டித்தால் என்ன?

"பணம் என்றல் பிணமும் வாய் பிளக்கும்" — இது பழமொழி! ஆனல் இப்போதோ, "பண மென்றல் நீதயும் சாகும்" என்றுதான் புது மொழி எழுதுகிறது 'உலக சரித்திரம்' எழுதிய பண்டிதரின் பேனு!

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் உயர் பதவி வகித்தவர்களான படேல், காமத், வைத்தியநாதன் — ஆகியோர்தான் இந்த மோசடிக்கு முழு முதற் காரணகர்த்தாக்கள் — என்றூர்கள், தீர்ப்பளித்தவர்கள்.

என்ன ஆயிற்று?

அவர்களை நோக்கி, "இப்படி அக்கிரமத்திற்கு வழி அமைத்தீர்களே; ஏன்?" என்று கேட்டதா அரசு? இல்லை; இல்லவே இல்லை!

"மக்களின் பணமய்யா அவை; நெற்றி வியர்வை நிலத்தில் விழப்பாடுபடும் ஏழை விவசாயிகளிடமிருந்து—கசக்கிப் பிழியும் ஆலை சக்கரங்களிடையே கிடந்து உழலும் தொழிலாளிகள், ஏழைகள் ஆகியோரிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணத்தை இப்படி 'விழலுக்கு' இறைத்த மாபாவிகளே! ஓடிப்போங்கள் நாட்டை விட்டு!"—என்று தண்டித்ததா; இல்லை கண்டித்ததா?

அவர்களைக் கண்டிக்கத்தான் இல்லை; அவர்கள் காலிலேயாவது விழாமல் இருக்க வேண்டாமா அரசு?

அந்தோ கொடுமையிலும் கொடுமை! கேளுங்கள் இந்தக் கதையை! பதவியைத் துறந்து மூலையில் உட்கார்ந்திருந்த காமத்தைப் பிடித்து இழுத்து வந்து புதுப் பதவி ஒன்றையும் தந்திருக்கிறது அரசு! அவர் திட்டக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கிருர்!

ஆமாம்; உடலெல்லாம் அழுகிப் போன குஷ்டரோகிக்கு உலகப் பேரழகியைத் தேடிப் பிடித்து திருமணம் நடத்துவதைப்போல் காமத்தைக் கைக்கூப்பி அழைத்திருக்கிறது டெல்லி!

இதுதான் நீதி காக்கும் லட்சணமா? இதுதான் 'ராமராஜ்ய'த் தீர்ப்பு முறையா?

நீதி — எதற்கும் வளையாதது என்பார்கள்! அதை வளைத்து ஒடித்துப் போடுகிருர் பண்டிதர், 'பணப் பூத'ங்களுடன் கைகோர்த்துக்கொண்டு! ஆகவேதான் 'முந்திரா விவகார'த்தில் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தெண்டனிட்டு வணங்கப்படுகிருர்கள்!

நாடோடிக் கதையிலே வருகிற நீதிபதி பணமூட்டை மோகத்தில் மனைவியை மாற்றனேடு அனுப்பினன்!

இது கற்பனைக் கதை.

இந்த நவயுக நீதிபதியோ, 'நன்கொடை'யைப் பெற்றபாவத்தால் நீதியையே திருடன் கையில் ஒப்படைக்கிருர்!

—இது காங்கிரஸ் ஆட்சி சமைக்கும் காட்சி !

இனவுணர்ச்சி இல்லாத மாந்தர் உயிர் வாழ்ந்தென்ன? போயென்ன?

தாழ்த்தப்பட்டோரின் வாழ்வுக்காக, பாழடைந்த சமுதாயத்திற்காக ஏசல்களைகளைத் தாங்கிக் கொண்டு—இழிமொழிகளைத் துச்சமென மதித்து—மிரட்டல், உருட்டல்களைக் கிண்டு அச்சங் கொள்ளாது பணியாற்றியவர்கள் மிகப் பலர்!

இந்த உத்தமர்களையெல்லாம் மறந்துவிட்டு —கண்ணீரைப் பரிசாகத் தரும் இவர் தம் வரலாறுகளையெல்லாம் புறக்கணித்து விட்டு,—"தாழ்த்தப்பட்டோரின் உயர்வுக்குப் பாடுபட்ட-பாடுபடுகின்றஒரே கட்சி காங்கிரஸ் கட்சிதான்!" —என்று அடித்துப் பேசி வருபவர் கனம் கக்கனர் அவர்கள்.

அத்தகைய 'சமுதாயத்தி விருந்து' வந்த காரணத்திற்காக-தலைவர்களை முறைத்துப் பார்க்காத 'விசுவாச'த்திற்காகவுமே அந்த மந்திரிப் பதவி தரப்பட்டிருக்கிறது என்பதை மறந்துவிட்டுப் பேசுகிருர், அவர்.

இந்த அரசு செய்கிற ஒவ்வொரு செயலும்–தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் புரியும் தொண்டுகள் அனைத்தும் சரியானது, அளவானது; எதிர்த்துக்கேட்கக் கூடாதது—என்று தம் இனம் இருக்கும் நிலை மறந்து பேசிவருகிருர்.

ஆனல் அதே நேரத்தில்.... டில்லியில்...., மத்திய அரசில்...., இடம்பெற்றிருக்கும் இவரைப் போன்ற 'தாழ்த்தப்பட்ட இனத்தை'ச் சார்ந்த ஒருவர்—ஓர் அமைச்சர் "அரசின் போக்கே சரியில்லை, தாழ்த்தப்பட்ட இனத்திற்



காகச் செய்யும் பணியைப் பொறுத்த அளவில்!" என்றர்.

ஆம்; ஜகஜீவன்ராம் எனும் மத்திய அரசின் அமைச்சர்தான் அப்படிக் கூறியிருக்கிருர்!

"இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்யும் தொண்டுகள் போதுமானதாயில்லை; அந்தச் சமுதாயத்தைப்பற்றிய--அதன் சீர்திருத்தத்தைப் பற்றிய கருத்துகளில் அரசின் செயல் தீவிரமாக இல்லை; இப்போக்கு மாற வேண்டும்!" — இவ்வளவு துணிவோடு அவர் குறிப்பிடுகிருர்.

அவருக்கு இந்தத் துணிவைக் கொடுத்தது எது? தலை நிமிர்ந்து பேசும் தன்மையைத் தந்தது எது?

பதவியா? பட்டமா? ஆள் பலமா? பண பலமா?—இவைகளை யெல்லாம்விட அவருக்கு இந்தத் துணிவைத் தந்தது, சிந்தனை!

ஆம்; தம்முடைய சமுதாயம் புழுப்பொதிந்த புண்ணக இருப்பது ஏன்? பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத்தேரைகளாய், புழுக்களாய் வாழ்வதை ஏன் இந்த அரசு தடுக்கக்கூடாது என்ற எழுச்சி எண்ணம்!

இந்த எழுச்சி எண்ணமும், சிந்தனையும் கக்கனருக்கு இல்லாதது ஏன்? தன் சமுதாய வாழ்விற்காகத் தலை நிமிர்ந்து தட்டிக் கேட்கும் துணிவு இல்லையே ஏன்?..........

ஏன்?...ஏன்?.

அசோசியேடட் புரொடியூசர்சின் மூன்ருவது படம்!

அசோசியேடட் புரொடியூசர் சார் தங்களது மூன்ருவது படத்திற்கான ஆக்க வேலைகளை இப்போது கவனித்துக்கொண்டிருக்கிருர்கள். விரைவில் படப்பிடிப்புக்குச் செல்ல இருக்கின்ற இப்படத்தின் திரைக்கதை வசனத்தை தோழர் மாறன் எழுதியிருக்கிருர். யோகானந்த் டைரக்ட் செய்யப் போகிருர். கதாநாயகி வேடத்தில் அஞ்சலி தேவி நடிப்பார் என்றும், டி.எஸ். பாலையாவும் நடிக்க இருக்கிருர் என்றும் இதுவரை தெரிகிறது. இசை அமைப்பை கே. வி. மகாதேவன் கவனிக்கிருர். குடும்பச் சூழ்நிலையை மையமாகக் கொண்ட இப்படம் குறுகிய காலத்தில் தயாரித்து முடிக்கப்படும் என்று தயாரிப்பாளர்கள் அறிவிக்கிருர்கள்.

டாக்டர்

அருணசலம் ஸ்டுடியோவில் 'அம்பலத்து அதிசயம்', 'கைதியின் காதலி' ஆகிய படங்கள் ஒரு பக்கத்தில் நடந்துகொண்டிருக்கும்போதே அதிபர் ஏ. கே. வேலன் மற்றுமொரு புதிய படத்தை இப்போது வேகமாகத் தயாரித்துக் கொண்டிருக்கிருர். 'டாக்டர்' என்று தலைப்பு சூட்டியிருக்கின்ற அந்தப் படத்தில் வளையாபதி முத்துகிருஷ்ணன் கதாநாயகனுகவும், சௌகார் ஜானகி கதாநாயகியாகவும் நடித்துக் கொண்டிருக்கிருர்கள். திரு. வேலனே கதை வசனம் எழுதியிருக்கும் இந்தப் படத்தை அவரே 'டைரக்ட்' செய்கிருர்.

ஜுபிடரின் மதுரை மன்னன்!

வெற்றிப் படங்களைத் தயாரிக்கும் ஜுபிடர் ஸ்தாபனத்தார், தற்போது புதிய படமொன்றிற்குத் திட்டமிட்டிருக்கிருர்கள். அப்படத்தின் பெயர் "மதுரை மன்னன்"! மேலும், புதிய நடிகர் ஒருவரை இப்படத்தில் அறிமுகப்படுத்தப் போகிருர்களாம். கதாநாயகனுக ராமனுதன் எனும் பெயருள்ள அப் புதுமுகத்துடன், சரோஜாதேவி, தாம்பரம் லலிதா, எஸ். ஏ. நடராஜன் முதலியோர் நடிக்கின்றனர். சோலைமலை கதை வசன மெழுத, சி. எச். நாராயணமூர்த்தி இப்படத்தை டைரக்ட் செய்கிருர்.

வீரக்கனல்

நடிகர் பி. எஸ். வீரப்பாவின் இரண்டாவது தயாரிப்பாக 'வீரக்கனல்' வளர்ந்து வருகிறது. துவக்கத்திலேயே வேகமாகத் தயாராகி வருகின்ற அப்படத்தின் வெளிப்புறக் காட்சி ஒன்றை சில தினங்களுக்கு முன் சேலம், ஒகனகல் காவேரிப் பகுதியில் படமாக்கினுர்கள். இப்படத்தில் அஞ்சலிதேவி, ஜெமினி கணேசன், எம். என். ராஜம், பி. எஸ். வீரப்பா முதலியோர் நடிக்கின்றனர். இப்படத்தை ஜி. கே. ராமு 'டைரக்ட்' செய்கிருர்.

உமர்கய்யாம்

இறந்தும் இறவாப் புகழ்பெற்ற மேதைகளின் வாழ்க்கைச் சரித்திரங்களைப் படமாக்க வேண்டும் என்ற பேரார்வம் இப்போது திரையுலகிலே ஏற்பட்டிருக்கிறது. அத்தகைய வரலாற்றுச் சிறப்புடையோரது பாகத்தை ஏற்று நடிக்க நடிக நடிகையரும் மிகவும் விரும்புகிருர்களாம். அத்தகைய படமொன்று இப்போது தயாராக இருப்பதாக வட நாட்டுத் திரையுலகச் செய்திகள் கூறுகின்றன. மது — மங்கை — மாக்கவிஞன் பாடல் — இவை தான் 'சொர்க்கம்' என்று 'வாலிப சிந்தாந்தத்தை' ஏற்படுத்தி, அதன்படியே நடந்து காட்டிய பாரசீகக் கவிஞன் உமர் கய்யாமின் வாழ்க்கை அந்த முயற்சியில் அகப்பட்டிருக்கிறது. அதில் வைஜயந்திமாலாவும், உமர்கய்யாமாக திலிப்குமாரும் நடிப்பார்கள்.

மேகலா பிக்சர்ஸ் 'குறவஞ்சி'யில் சிவாஜி கணேசன், மைனுவதி !

பேனா முனையும் ஏர் முனையும்

சேவா ஸ்கிரீன்ஸ் என்ற படக் கம்பனியார், அடுத்த படமொன்றிற்குத் திட்டமிட்டிருக்கின்றனர். மலயாள நாட்டில் பெரும் புகழ் பெற்ற கதையொன்றைப் படமாக்குவார்கள் எனத் தெரிகிறது. அமைதியும், ஆழ்ந்த பண்பும் கொண்டு விளங்கும் கிராமத்துச் சூழ்நிலையையும், இரைச்சலும் மேலோட்டமான பண்பும் படைத்த பட்டணத்து வாழ்வையும் விளக்குவதாக அத்திரைப்படம் அமையுமாம். மாறுபட்ட கொள்கைகள் படைத்த அண்ணன் தம்பி பாத்திரங்கள் படைக்கப்படப் போகின்றனவாம். அத்துடன் மொட்டவிழ்ந்தும் அவிழா மலரான ஒரு இள மங்கையின் வாழ்வைச் சூறையாடும் மிராசுதார் ஒருவரும் இப்படத்தில் தோன்றுவராம். இப்படத்தின் பெயர் 'பேனு முனையும் ஏர் முனையும்'!

லண்டன் நாடக மேடையில்...

தமிழர் ஒருவர் லண்டன் மாநகரில் நடக்கவிருக்கும் நாடகமொன்றில் பங்கேற்கவிருக்கிருர். சாமிநாதன் என்னும் பெயருள்ள அவர் இதற்கு முன் சென்னையிலும், லண்டனிலும் மேடை நிர்வாகியாகப் பணியாற்றினவராம். லண்டன் மாநகரத்தைச் சேர்ந்த பீட்டர் கோ என்பவர் தம் நாடகக்குழுவுடன் சென்னை வந்து, ஷேக்ஸ்பியர் நாடகங்கள் நடத்திய போது அவருக்கும் சாமிநாதனுக்கும் தொடர்பு ஏற்பட்டதாம். பின்னர் பீட்டர் கோவுடன் லண்டன் பயணமானுராம். இன்னும் ஓராண்டில் சாமிநாதன் தம் தாயகத்திற்குத் திரும்பிவர எண்ணுகிருராம்!

நூலேணி

இங்கிலாந்தில் ஒரு தி. மு. க.

முகவை ஆர். எஸ். பாண்டியன்

"நாட்டின் பெருமை செல்வ வளத்தில் இல்லை — நீர்வளம் நிலவளத்தில் இல்லை—'நாங்கள் சுதந்திரமுள்ள மனிதர்கள்' என்னும் நினைப்பிலேதான் இருக்கிறது. இப்படிப் பெருமை படைத்த நாடுதான், நாடு! மற்றவை, காடு!"—இந்த இலக்கணத்தைப் பக்கத்திற்குப் பக்கம் ஆதாரங்கள் கை கொடுக்க தோழர் பாண்டியன் அழகுத் தமிழில் தீட்டியிருக்கிருர், இந்த அரசியல் ஏட்டை.

வரிக்கு வரி விடுதலைக் கனல் தெறிக்கும் இந்தப் புத்தகம் திராவிடத் தனியரசு காணத் துடிக்கும் இளைஞர்களுக்குப் புதியதொரு படைக்கலக் கருவியாக இருக்கும் எல்லா தகுதிகளையும் பெற்றுத் திகழ்கிறது.

வேல்ஸ் நாட்டு இளைஞர்கள் இங்கிலாந்திலிருந்து பிரிந்து அமைத்துக் கொண்டிருக்கும் விடுதலைக் கூடாரமாகிய 'பிளாட் சிமிறு' எனும் கழகத்திறகும். தி. மு. கழகத்திற்கும் அடிப்படைக் கற்களாய், ஆணி வேர்களாய் அமையும் தத்துவங்கள், கருத்துகள் பற்றிப் பேசும் இந்நூல், இயக்கத் தோழர்கள் அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்! ஆசிரியர் காட்டி யிருக்கும் சுவையான மேற்கோள்கள் பாராட்டுக்குரியவை.

[கிடைக்குமிடம் : கலையரசி பதிப்பகம், 27, குட்டிநாயக்கன் தெரு, சென்னை—2. விலை. 50 காசு. பக்கங்கள்: 48.]

'திருடாதே' என்ற படத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆரும், எம். என். ராஜமும் இப்படித் தோன்றுகிருர்கள்.

சுழல் விளக்கு

மாலுமி

பி. சோமசுந்தரம்; சென்னை—4.

(?) பொங்கல் ஒரு பண்டிகையல்ல — என்பது டெல்லி அரசினரின் கருத்தாமே?

தமிழர் சமுதாயத்தின் தனிப் பெரும் விழாவை அவர்கள் மதிக்கவில்லை என்பதைத் தான், அவர்களது நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன. குறிப்பாக, சென்னை வானொலி நிலையத்தில் பணியாற்றுகின்ற தமிழர்கள், இந்த வெறுக்கும் பண்பினால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். விசேட காலங்களில் அங்கு பணியாற்றுகிறவர்களுக்கு சம்பளத்தில் முன்பணம் தருவது வழக்கம். அவசரத் தேவைக்குத் தரப்படுகின்ற அத்தொகையைப் பின்னால் சம்பளத்தில் பிடித்துக் கொள்வார்கள். இந்த முறைப்படி 'தீபாவளி'க்கு முன்பணம் தருகிறார்கள்; 'பக்ரீத்'துக்கும் உண்டு; 'ஓணத்'திற்கும்கூடத் தரப்படுகிறது; ஆனால், அந்தோ பரிதாபம்; பொங்கல் விழாவின் போதுமட்டும் இந்த வழக்கம் மறுக்கப்படுகிறது. தொழிலாளிகள் பலமுறை கோரிக்கை எழுப்பியும், அவை எல்லாம் அதிகாரிகளின் பாதத்தடியிலே நசுக்குண்டு போயின. 'அதை ஒரு பண்டிகையாகக் கருத முடியாது' என்று அதற்குக் காரணமும் கூறுகிறார்களாம்.

மா. துருவன்; வேப்பேரி.

(?) கோயங்காவை காங்கிரஸ் ஆட்சி கண்டிக்காதது ஏன்?

அவர் 'தவறு' செய்கிறார் என உணர்ந்து கொள்ளக்கூடிய அளவுக்கு நெஞ்சிலே ஈரம் இருந்தால் அல்லவா கண்டிக்க முடியும்? அதோடு மட்டுமல்ல தோழரே; அவர் 'நன்கொடை' கொடுப்பவர்!

பிரேம்குமார்; முசிரி.

(?) 'ஆகாஷ்வாணி'யைத் தமிழ்தான் என்று கூறுவோரைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

தமிழனுடைய பிணம்கூட சொல்ல முடியாத இந்தச் சொற்களை உளறியவர் எவரையாவது 'கீழ்ப்பாக்கத்தில்' சந்தித்தீர்களா?

பி. ஆனந்தன்; டெல்லி,

(?) டில்லி ஏகாதிபத்தியத்தின் தினசரி உணவு என்ன?

அதன் காலடியில் நசுங்கிக் கொண்டிருக்கும் திராவிடச் சமுதாயத்தின் இதயம்தான்!

ந. கரிகாலன்; திருச்சி.

(?) சேரி என்றால் என்ன?

கீறி விடப்பட வேண்டிய சமுதாயக் கொப்புளம். ஆனால் அதையும் வைத்துக் கொண்டு அழகு பார்ப்பவர்கள் இருப்பதால் இன்னும் அது இருக்கிறது.

பி. சின்னதம்பி, காரிசாத்தன் குளம்.

(?) வேலையில்லாத்திண்டாட்டம் எப்போது ஒழியும்?

இன்றிருக்கும் நிலையில் அதற்கு அழிவே இல்லை; மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகும் 'என்றும் பதினாறாய்' வேலையில்லாத் திண்டாட்டம் அப்படியே இருக்குமென்று திட்டமந்திரி திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்!

சி. சீனிவாசன்; ஓலப்பாளையம்.

(?) தென்னாட்டுக் காங்கிரஸ்காரர்கள் டில்லிக்குப் போகும் வழியில் என்னென்ன காட்சிகளைக் காண்பார்கள்?

* எட்டு முழத்தில் கோவண வேட்டி கட்டியவர்கள்
* கதர்க் குல்லாய் போட்ட காங்கிரஸ்காரர்கள்
* இந்தி வெறி
* இந்து—முஸ்லீம் பேதம்
* வடக்கின் வளர்ச்சி
* தென்னகம் பிரிய வேண்டும் என்று கூறுபவர்களிடம் இருக்கும் அப்பழுக்கற்ற நியாயம்

இ. முனாப்; ஆலந்தூர்.

(?) பக்ரா கால்வாயைப்போல் இந்திய அரசினரால் தென்னகத்தில் எங்கு, எப்போது வெட்டப்படுமா?

கனவு காண்கிறீரா, தோழரே! பாரத சர்க்காரில் நாம் ஒட்டிக் கொண்டிருக்கிறவரை அந்த ஆசை உம் இதயத்தில் எங்காவது ஒட்டிக்கொண்டிருந்தால் அதை உடனே எடுத்து வீசி எறிந்து விடுங்கள்; பக்ராவைப் போல் அல்ல, ஒரு சிறு வாய்க்கால்கூட உங்கள் நாட்டில் வெட்டப்படமாட்டாது; கால்வாய்கள் வெட்டப்பட வேண்டும் என்ற ஆசை உள்ளபடியே உமக்கிருந்தால், வடவர்களின் உறவை வெட்டுக்கொள்வோம் என்ற முடிவுக்குத்தான் வருவீர்கள்.

வாழ்த்துகிறோம் !

கழகத் தோழரும், திருவாரூர் கருணாநிதி அச்சக உரிமையாளருமான தோழர் கருணை. எம். ஜமால் அவர்களுடைய செல்வி ரமீசா பேகத்திற்கும், நீடாமங்கலம் கே. எம். முகம்மது சுல்தான் அவர்களுடைய செல்வர் முகம்மது ஜஹ்பர் அவர்களுக்கும் சென்ற திங்கள் 31-ம் தேதியன்று விஜயபுரத்தில் (திருவாரூர்) மிகச் சிறப்புற திருமணம் நடைபெற்றது. புதுவாழ்வு துவங்குகின்ற மணமக்களுக்கு எமது இதயபூர்வமான நல் வாழ்த்துக்கள்.

சேற்றில் முளைத்த செந்தாமரை

★

திருச்சி மாவட்டம்-தென்னகத்தின் கைகளிலே பூட்டப்பட்ட அடிமைச் சங்கிலிகளைத் தூள் தூளாக்கிப் போடும் தீரர்கள் நிறைந்த கோட்டம் என்பதை மறுபடியும் நிரூபித்திருக்கிறது.

மக்கள் கடலெனத் திரண்டனர், திருச்சியையடுத்த துறையூர் எனும் சிற்றூரில், திருச்சி மாவட்ட தி. மு. கழகத்தின் மூன்றாவது மாநாடு நடந்த காலை!

கொல்லிமலைச்சாரலின் பக்கத்திலே நம்மைக் வாட்டிட நினைக்கும் டில்லி ஆதிபத்தியத்தின் அங்கங்களை அணுக்களாகத் துளைத்திடும்விடுதலைப் படைகூடியது; தம் வாளையும் வேலையும் தீட்டிக் கொண்டனர்; மார்பிலே பட்ட காயங்களுக்கு மருந்து போட்டுக் கொண்டனர்! போர் வடுக்களைத் தடவிப் பார்த்த நேரத்தில் எழுந்த உணர்ச்சியால் "எங்கே போர் ?"—என்று உரக்கக் கூவினர்!

இந்த வீரர் படை முகாமிற்குத் தலைமை வகித்தவர் சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு அவர்கள். அவருடைய பேச்சும், எழுத்தும் 'தீச் சுடர்' என மக்களால் போற்றப்படுகின்றன!

இவர் பேச்சைக் கேட்டால் நரம்பு புடைக்கும்; இரத்தம் கொதிப்பேறும்; தலை நிமிரும்; தன்மானத்தின் எதிரிகளைத் துச்சமென நினைக்கும் அச்சமற்ற மனோபாவம் தலை காட்டும்!

அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், தென்காசி மாநாட்டிலே "தி. மு. க. இன்று தார்போட்ட பாதையில் சென்று கொண்டிருக்கிறது—என்று!

ஆனால் நம் கழகம், கல்லும் முள்ளும் நிறைந்த மண்பாதையில் வீர நடை போட்டபோது. பாதையைச் சீர்படுத்தி, கழகத்தின் இப்போதைய ஏறுநடைக்கும், பீடுநிறைந்த பார்வைக்கும் வழி வகுத்தவர்களில் முக்கியமான இவர் தலைமை வகித்தது மாநாட்டின்பெருமையில் மேலும் ஒளி சேர்த்தது; இவருடைய தலைமையுரை வந்திருந்தோருக்கு ஒரு விருந்தாக அமைந்தது.

மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசினார், தோழர் மாறன் எம். ஏ. அவர்கள்!

முதல் நாள் நிகழ்ச்சியில் பல்வேறு சுவைமிகு தலைப்புகளில் கழகத்து முன்னணியினர் பேசினர்.

இரவு 10 மணி யளவில் தோழர். மு. கருணாநிதி எம். எல். ஏ. எழுதி, நடிக்கும் முரசு நாடக மன்றத்தின் 'உதயசூரியன்'நாடகம் சிறப்புற நடைபெற்றது.

அடுத்த நாள் நிகழ்ச்சியில் அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன் உட்பட பல கழக முன்னணியினர் கருத்துரையாற்றினர்.

இரண்டாம் நாள் பெருமழை பெய்தும், முழங்கால் சேற்றிலே பதிந்தும் மக்களனைவரும் முன்னணி வீரர்களின் பேச்சை உன்னிப்புடன் நின்று கேட்ட காட்சி பல்லாயிரம் செந்தாமரைகள் சேற்றில் முளைத்தெழுந்து, உதய சூரியனை எதிர்நோக்கிய காட்சியைப் போலிருந்தது.

தோழர்வி.பி. ராமன் அவர்கள் கூறியபடி வடவர் ஏகாதிபத்தியம் எனும் சகதிச் சேற்றிலே சிக்கி விட்டோம் நாம்; உதய சூரியனின் ஒளிக் கதிர்களினால் காய்ந்து விடப் போகும் அந்தச் சேற்றிலிருந்து விரைவிலே கால்களை உதறி யெடுக்கப் போகிறோம்; அடிமைத்தளைகளிலிருந்து விடுபடப்போகிறோம்—என்பதை இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் இயற்கை ஒத்திகை நடத்திக் காட்டிற்று!

ஈடுஇணையற்ற இம்மாநாட்டின் வெற்றிக்குழைத்த வரவேற்புக் குழுத் தலைவர் அம்பில் தர்மலிங்கம், செயலாளர்கள் மு. பெ. முத்துக் கருப்பன், சு. நெடுமாறன் தொண்டர் படைத் தலைவர்கள் கை. ஆறுமுகம்; கோ. சிவப்பெருமாள் முதலிய கழக வீரர்கள் மாநாட்டினர் பாராட்டுதல்களைப் பெற்றிட மாநாடு மகிழ்ச்சிப் பெருக்குடன் முடிவுற்றது. .:.

பார் பார்!...

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

'தர்ம யுத்தம்' நடத்தினால்; இதைப் போன்ற 'தர்ம யுத்தங்கள்' எல்லா மாநிலங்களிலும் நடைபெற ஆரம்பித்தால்; அந்தத் தொடர்ந்த — இடைவிடாத போராட்டத்தைக் காங்கிரஸ் எத்தனை நாட்கள் சமாளித்து நிற்கமுடியும்?

சென்னையைப் பொறுத்தவரை தி. மு. கழகமே அதை முன்னின்று நடத்துமேயானால் காமராசர் ஆட்சி நிலைத்து நின்று அதிக நாள் நடைபெறத்தான் முடியுமா ?

பண்டித நேரு இந்தியாவை ஜனநாயத் தோட்டம் என்று கூறுகிறார், செஞ்சீனத்தின் வருத்தத்தையும் தாங்கிக் கொண்டு திபெத்காரர்களுக்கு தஞ்சம் தர முன் வந்திருக்கிறார், ஜனநாயகத்தைக் காரணம் காட்டி!

—அதே ஜனநாயகம் இன்று கேரளத்திலே அணுஅணுவாகச் சித்திரவதை செய்யப்படுவதைப் பார்த்துக் கொண்டு மறைமுகமான ஆதரவு கொடுத்தவந்தால் அவரை ஜனநாயகவாதி என்று இனியும் கருதுவதிலே என்ன அர்த்தம் இருக்கிறது?

—இதைத்தான் நாடு இன்று ஏகோபித்த குரலில் எதிரொலித்துக்கொண்டிருக்கிறது!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு